Digitization by eGangotri-South Center

ஸ்ரீமுக வருஷத்திய

நேத்திர – ஜீவ – நக்ஷத்திராதி. சாந்... – சௌரமான / சர்வ முகூர்த்த

பாலன்

சுத்த திருக்கணித பஞ்சாங்கம்

இதில் தேசாந்திர ஸம்ஸ்காரம் அச்சிடப்பட்டிருப்பதால், இதை எல்லா இடங்களுக்கும் எளிதில் உபயோகித்துக் கொள்ளலாம். சென்னை மத்திய ஸ்தானத்திற்குக் கணிக்கப்பட்டது.

இதில் நவக்கிரக சாயன, நிராயன சுத்த ஸ்புடம் கொடுத்திருக்கிறது. இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய அதிக உபயோகமாகும்.

96 - பக்கமுள்ள "பாலன்" பெரிய பஞ்சாங்கத்தை பார்த்து வாங்கவும்.

பல ஆண்டுகளாக பிரசித்தி பெற்ற ஆனந்த போதினி பஞ்சாங்கத்தை கணித்து
வந்த வாக்கிய திருக்கணித கணிதத்தில் முதிர்ந்த தேர்ச்சி பெற்ற ஆரிய,
சூரிய, சித்தாந்தங்களில் வல்ல பெரியோர் உதவியுடன்
"ஆனந்தபோதினி" நாகவேடு நா. முனிசாமி முதலியார் பேரன்

திரு. N.B. மகேந்திரன்
அவர்களால் கணிக்கப்பட்டு

அவர்களின் "பாலன் பப்ளிகேஷன்ஸ்" நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டது.

(Copy Right) **1993** விலை ரூ. 16

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இப்பஞ்சாங்கம் உபயோகிக்கும் விதம்

ஜோதிட சாஸ்திரம் தெரியாதவருங்கூட எளிதில் அறிந்துகொள்ளும்படி கூடியவரையிலு ஜோதிஷத்திற்கு உரிய பதங்கள் (Technical Words) நீக்கப்பட்டு எளிய பதங்கள் உபயோ. படுத்தியிருக்கிறது. பஞ்சாங்கம் என்பது வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம். ஆகிய இ வைந்து அங்கங்களுடையது. இவ்வைந்து அங்கங்களின் பெயர்களும் குறுப்பு எழுத்துக்களு 74-வது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. திதி என்பது ஆகாயத்தில் சந்திரனுக்கும் சூரியனு கும் உள்ள தூரம். யோகம் என்பது ஆகாயத்தில் ஒரு குறித்த இடத்திலிருந்து சூரியனும் சந்தி னும் செல்லுகின்ற மொத்த தூரம், கரணம் என்பது திதியில் பாதி. மேற்கண்ட பஞ்ச அங்கங்களு மின்றி இன்னும் சில விஷயங்களும் அடங்கியுள்ளன. அவை : (1) அகில இந்திய மீ", வ (2) முஸ் லிம் மீ", வ (3) ஆங்கில மீ", வ (4) தமிழ் மீ". வ (5) தியாஜ்யம் : இது நக்ஷத்திர காலத்திலுள்ள விஷகாலம்; குறிப்பிட்ட நேரம் முதல் 4 நாழிகை; அக்காலத்தில் எவ்வித காரியங்களும் விலக்கப் படும். 6. அமிர்தாதி யோகம். இவை அ-அமிர்தயோகம், சி-சித்தயோகம், ம-மரணயோகம் பி-பிர பலா ரிஷிடம் எனவரும். இவை வாரத்தையும் நக்ஷத்திரத்தையும் அனுசரித்தவை. இவைகளில் மரணயோகமும் பிரபலாரிஷ்டமும் எல்லாக் காரியங்களுக்கும் விலக்கப்பட்டன; மற்றவை நன்று. (7) நேத்திரம்-இது சூரியனுடைய ஓட்டத்தை அனுசரித்து நக்ஷத்திரங்கள் நல்லது கெட்டது என்று தெரிவிக்கும். 2-என்பது உத்தமம், 1-மத்திமம், 0-அதமம் (8) ஜீவன்-நேத்திரத்தைப் போன்றது. 1-உத்தமம், ½-மத்திமம், 0-அதமம். (9) விவாக சக்கரம்-இதை விவாகத்திற்கு அனுசரித்தல்; நடு, தென்கிழக்கு, தெற்கு, மேற்கு, வடமேற்கு இவைகளுக்கு எதிரிலுள்ள நக்ஷத் திரங்கள் ஆகா. மற்றவை நன்று. (10) வாரசூலை - இது வாரத்தை அனுசரித்து, பிரயாணத் திற்கு முக்கியமாய் அனுசரிக்க வேண்டும். சூலையுள்ள திக்கில் பிரயாணஞ் செய்யலாகாது, அவ சியமாய்ப் போகவேண்டியதானல் 78-வது பக்கத்தில் சொல்லிய பிரகாரம் செய்யவேண்டும். (11) யோகினி-இது திதியை அனுசரித்து. பிரயாணத்திற்கு இவை முக்கியமாய் கவனிக்கவேண் டும். பிரயாணத்திற்கு யோகிணி பின்னும் இடமும் நன்று, முன்னும் வலமும் தீது. ஆகாசமும் பூமியும் மத்திமம். (12) சென்னை அகஸ் இது சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரையில் உள்ள காலம் அல்லது பகற்பொழுது (13) இராசி இருப்பு இது சூரிய உதயம் முதல் ராசி வியாபிக்கும் நேரம்.

நாழிகை, விநாடி என்பது இந்திய தேசத்துக் கால அளவு. ஒருநாள் 60 நாழிகை அல்லது 24 மணியும், 1 நாழிகையில் 60 விநாடியும் அடங்கியுள்ளன. ஆகவே 1 மணிக்கு 2½ நாழிகையும் 1 நிமிஷத்திற்கு 2½ விநாடியும் ஆகின்றது, இப்பஞ்சாங்கத்தில் கால அளவு நாழிகை விநாடியிலும் மணி நிமிஷத்திலும் காட்டப்பட்டிருக்கிறது.

பஞ்சாங்கத்தில் நாழிகை சூரிய உதயத்திலிருந்து கணக்கிடப்படும். திதி நக்ஷத்திரம் முதலிய வைகளில் எதிரிலுள்ள நாழிகை விநாடிகள் ஷை திதி நக்ஷத்திரங்கள் முடிவு பெறுகிற க்ஷணம் சூரிய உதயத்திலிருந்து இத்தனை நாழிகை. விநாடி என்று தெரிவிக்கும். **உதாரணம் :**—(1) ஒரு தினம் பஞ்சமி நா, 24-57 என்றால் அன்று சூரிய உதய முதல் நா. 24-57 க்கு பஞ்சமி முடிந்து அதற்கு அடுத்த திதியாகிய சஷ்டி உடனே ஆரம்பிக்கிறது. (2) ஒரு நாள் திருதியை நா. 4-13, சதுர்த்தி நா. 56-13 என்றால் அன்று சூரிய உதய முதல் நா. 4-13 வரை திருதியை இருந்து உடனே சதுர்த்தி ஆரம்பித்து அன்று சூரிய உதய முதல் நா. 56-13 க்கு முடிக்கிறது. அதனால் சதுர்த்தி (நா. 56-13)—(4-13) = 52-00 இதை உபரி சதுர்த்தி என்று போடுவோரும் உளர். (3) ஒரு நாள் மகம் நா. 54-55, மறுநாள் பூரம் 60-00 அதற்கடுத்த நாள் பூரம் நா. 2-10 என்றால் பூரம் முதல் நாள் சூரிய உதய முதல் நா. 54-55 க்கு முடிந்து உடனே பூரம் ஆரம்பித்து இரண்டா வது நாள் முழுவது இருந்து மூன்றாம் நாள் சூரிய உதய முதல் நா. 2-10 க்கு முடிகிறது எனக் கொள்க.

தியாஜ்யம் : முன் சொன்னபடி இது நக்ஷத்திர விஷகாலம்; இதன் ஆரம்பம் காட்டி இருக் கிறது. அதற்குமேல் 4-நாழிகை விஷகாலம், **உதாரணம் :**—ஒரு நாள் தியாஜ்யம் நா. 36-50 என்றால், அன்று சூரிய உதய முதல் நா. 36-50 க்கு மேல் நா. 40-50 வரை விஷகாலம். இக் காலம் சுப காரியங்கள் விலக்கப்பட வேண்டும்

சிராத்தம் : திருக்கணிதப்படி 24-வது வகுப்பில் இருக்கிறது-சிராத்தம் அல்லது திவசம் கொடுக்க வேண்டிய நாளைக் குறிக்கிறது. **உதாரணம் :** -(1) ஒரு மாதம் ஒரே சிராத்த திதி வந்தால் இரண்டாவது (கடைசியில்) வரும் திதியில் திவசம் கொடுக்கப்படவேண்டும். அம்மாதிரி கொடுக்கப்படாமல் கடைசியில் வரும் திதி, தோஷத்தால், சூன்ய திதி என்று போட்டிருந்தால், முதலில் வரும் அத் திதியில் திவசம் கொடுக்க வேண்டும் கடைசியில் வரும் சூன்ய திதியில் கூடாது எனத் தெரிவிக்கும்.

○ பௌ, ●-அமா, ✱-கிரு, இக்குறிகள் முறையே அந்தந்த விரதங்களைக் குறிக்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

ஓம் பரப்பிரம்மணே நம :

ஸ்ரீமுக வருஷத்திய

(நேத்திர - ஜீவ - நக்ஷத்திராதி, சாந்திர - சௌரமான சர்வ முகூர்த்த)

பாலன்

சுத்த திருக்கணித பஞ்சாங்கம்

அசிந்த்யாவ்யக்த ரூபாய நிர்குணய குணாத்மநே
ஸம்ஸ்த ஜகதாதார மூர்த்தயே ப்ரஹ்மணே நம :

ஸ்ரீராகவம் தசரதாத்மஜமப்ரமேயம் ஸீதாபதிம் ரகுகுலான்யவய ரத்நதீபம்
ஆஜானுபாஹுமரவிந்த தளாயதாக்ஷம் ராமம் நிசாசர விநாசகரம் நமாமி

ஸ்ரீமுக வருஷத்திய வர்த்தமான வருஷங்கள்

கலியுகாதி	வருடம்	5095	ஆங்கில	வருடம்	1993-1994
கதசாலிவாகன	வருடம்	1915-1916	பசலி	வருடம்	1402-1403
கொல்லமாண்டு	வருடம்	1168-1169	ஹிஜ்ரீ	வருடம்	1413-1414
விக்ரமசகாப்தம்	வருடம்	2050-2051	பிரபவாதி	வருடம்	7-வது
வட இந்தியா	வருடம்	பார்த்திப	தென் இந்தியா	வருடம்	ஸ்ரீமுக

நவ நாயகர்கள்

இராஜா	புதன்
மந்திரி	அங்காரகன்
சேனாதிபதி	சந்திரன்
அர்க்காதிபதி	சந்திரன்
ஸஸ்யாதிபதி	சுக்ரன்
இரஸாதிபதி	சூரியன்
தான்யாதிபதி	புதன்
மேகாதிபதி	சந்திரன்
நீரஸாதிபதி	சுக்ரன்

மழை மரக்கால் மூன்று
(முக்குறுணி)

உப நாயகர்கள்

புதன்	குதிரைக்கு
அங்காரகன்	யானை
சந்திரன்	பசு
சந்திரன்	பக்ஷி
சுக்ரன்	பிரஜை
சூரியன்	சர்ப்பம்
புதன்	ஒட்டை
சந்திரன்	விருக்ஷம்
சுக்ரன்	கிரகம்

உபநாயகர் ஆகிறார்கள்

ஸ்ரீமுக வருஷ பலன் வெண்பா

தேடுநற்சீமுகத்திற்றேசந்தழைத்தோங்கும்
நாடியே முன்மழையோ நல்காது - நீடிய பின்
னான மழையுண்டு நவதானியம் பெருகும்
தானோவு முண்டென்றே சாற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீமுக வருஷத்திய நவ நாயகர்கள் பலன்

ராஜா – புதன் :	கலைகள் விருத்தியாகும். கலைஞர்களுக்கும், பண்டிதர்களுக்கும் நன்மை உண்டாகும். கல்வியில் பல மாறுதல் உண்டாகும்.
மந்திரி – அங்காரகன் :	அநாசாரம் திருடர் பயம், நெருப்பு, ஆயுதங்களால் தீமை.
சேனாதிபதி – சந்திரன் :	சமாதானத்திற்கான முயற்சி ஏற்படும். பால், தான்ய அபிவிருத்தி.
அர்க்காதிபதி – சந்திரன் :	இனிப்பான பழங்கள் விருத்தியாகும். தான்ய விலை ஏற்றம்.
ஸஸ்யாதிபதி – சுக்ரன்:	கனிவர்க்கம் நற்பலன், மழை மிகுதி, பால் விருத்தி.
ரஸாதிபதி – சூரியன் :	எதிலும் சாரமற்ற போலி சரக்கு மலிந்து அசல் சரக்கு காண்பது அரிது.
தான்யாதிபதி – புதன் :	வியாபாரிகளுக்கு அனுகூலம், ஸஸ்ய உற்பத்தி பெருகும்.
மேகாதிபதி – சந்திரன் :	மழை மிகுதி, ஸஸ்ய அபிவிருத்தி.
நீரஸாதிபதி – சுக்ரன் :	நீர்வள விருத்தி, பூமி விலை ஏற்றம், உணவு பற்றாக் குறை.
பசு நாயகர் – நந்தகுமாரன் :	பசுபால் விருத்தி, புன்செய் தான்ய விருத்தி.
மேஷ சங்க்ரமண பலன் :	நீர்வளம் பெருகி முன்னேற்றம் ஏற்படும். ஜனவர்க்கத்தில் நீதி உண்டாகும்.
குரு உதயாப்தபலன் :	பரவினாற் போல் மழை பெய்யும் : கனி வர்க்கங்கள் நல்ல பலனைத் தரும்.
திருவாதிரையில் சூரியப்பிரவேசப் பலன் :	வஸ்துக்கள் விலை குறையும். தெய்வ பக்தி மிகும். ஸமாதானம் ஏற்படும்.
ஜேஷ்ட சுக்ல ப்ரதமை :	சனிக்கிழமை வருவதால் தொழில்கள் விருத்தியாகும். இரும்பு விலை ஏறும்.
ஆஷாட சுக்ல பஞ்சமி :	வியாழக் கிழமை வருவதால் ரஸ வஸ்துக்கள் விருத்தியாகும். நல்ல முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் தென்படும்.
ஆஷாட சுக்ல நவமி :	சித்திரை நக்ஷத்திரத்தில் வருவதால் புன்செய் பயிர் விருத்தியாகும். பொதுவாக விவசாயம் செழிக்கும்.
ஆஷாட சுக்ல தசமி :	சுவாதி நக்ஷத்திரத்தில் வருவதால் தான்யங்களுக்கு கிராக்கி ஏற்படும். உலோக ஸம்பந்த வஸ்துக்கள் விலை குறையும்.
ஆஷாட சுக்ல த்வாதசி :	வியாழக்கிழமை வருவதால் நாடு செழிக்கும். கலஹங்கள் அடங்கும்.
புஷ்ய அமாவாசை :	வியாழக்கிழமை வருவதால் புன்செய் தான்யங்கள் விருத்தியாகும். நோய்கள் குறையும்.
மழை பலன் :	மழை மரக்கால் மூன்று (முக்குறுணி) நல்ல மழை பெய்து விவசாயம் செழித்து நன்மை உண்டாகும்.

ஸ்ரீமுக வருஷத்திய ஆதிபத்திய (சமூகமான) பலன்

இவ்வருஷம் சந்திரனுக்கு 3 ஆதிபத்யங்களும, புதனுக்கும், சுக்ரனுக்கும் தலா 2 ஆதி பத்யங்களும், அங்காரகனுக்கும் சூரியனுக்கும் தலா 1 ஆதி பத்யமும் ஏற்படுவதால் கலைகள் விருத்தியாகும். விவசாயம் செழிக்கும். கலைஞர்களுக்கும் பண்டிதர்களுக்கும் நன்மை உண்டாகும். நல்ல மழை பெய்யும்.

சிரவண பலன் வருஷ ஆரம்பமான 'சைத்ரவிஷு' புண்யகாலத்தில் மிகவும் பக்தி சிரத்தையுடன் ஜோதிஷர்களை வணங்கி, புது வருஷபஞ்சாங்கத்தில் காணும் ஸம்வத்ஸர நவநாயகர் முதலிய பலன்களைச் சிரவணஞ் செய்து, வாரத்தைச் சொல்லுவதால் ஆயுள் வளரும். திதியை ஸமரிப்பதால் ஐஸ்வரியம் கிடைக்கும். நக்ஷத்திரத்தை உச்சரிப்பதால் பாபம் நீங்கும். யோகத்தைக் கூறுவதால் வியாதி குணமாகும். கரணத்தைக் கூறுவதால் நினைத்த காரியம் வெற்றியாகும். தினமும் காலையில் ஒரு முறை அன்றைய பஞ்ச அங்கங்களையும் படிப்பது மேன்மையாகும்.

சுபம் சுபம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கிரஹ சஞ்சார பலன்

அங்காரகன் : வருஷ ஆரம்ப முதல் ஆடி 17 வரை மிதுன – கடக – சிம்மங்களில் ஸஞ்சரிக்கும் காலம் விவசாயம் விருத்தியாகும். தொழிலாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நன்மை உண்டாகும். ஆடி 18 முதல் ஐப்பசி 15 வரை கன்னி – துலாங்களில் ஸஞ்சாரம் செய்யும் காலம் யந்திரங்கள் மூலம் விவசாயம் அபிவிருத்தி அடையும். தான்ய உற்பத்தி பெருகும். ஐப்பசி 15 முதல் வருஷ முடிய மகர – கும்ப – மீனங்களில் ஸஞ்சரிக்குங்காலம் உஷ்ண ஸம்பந்த நோய்கள் அதிகரித்துப் பின் குறையும். தொழிலாளர்களுக்கு நன்மை உண்டாகும்.

புதன் : வருஷ ஆரம்ப முதல் வைகாசி 16 வரை. மீன – மேஷ – ரிஷபங்களில் ஸஞ்சரிக்கும்போது வாத பித்த ரோகங்கள் அதிகரிக்கும். அரசாங்கத்தில் சில சீர்திருத்தங்கள் ஏற்படும். ஆசிரியர்களுக்கும், கலைஞர்களுக்கும் மேன்மை உண்டாகும். வைகாசி 17 முதல் புரட்டாசி 10 வரை. மிதுன – கடக – சிம்ம – கன்னிகளில் ஸஞ்சாரம் செய்யும் காலம் பயிர்களுக்கு பூச்சிகளால் சேதம் ஏற்படும். மழை பெய்து விவசாயம் செழித்து பொருள்கள் விலை குறையும். புரட்டாசி 11 முதல் மார்கழி 26 வரை துலா – விருச்சிக – தனுசுகளில் ஸஞ்சரிக்கும் காலம் இடி, மின்னலுடன் மழை பெய்யும். கலைஞர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நன்மை உண்டாகும். மார்கழி 26 முதல் வருஷ முடிய மகர – கும்ப – மீனங்களில் ஸஞ்சரிக்கும் ஸமயம் பொருள்கள் விலை ஏறும். வியாபாரிகளுக்கும் கலைஞர்களுக்கும் நன்மை உண்டாகும்.

குரு : வருஷ ஆரம்பம் கன்னியில் வக்ரீ. வைகாசி 19 வக்ர நிவர்த்தி புரட்டாசி 25 வரை கன்னியில் ஸஞ்சரிக்கும் காலம் விலைவாசி ஏறும். போலி ஆசாரம் குறையும். நற்காரியங்கள் அதிகரிக்கும். பின் வருஷ முடிய துலாத்தில் ஸஞ்சரிக்கும் காலம் நீசத் தொழில் மிகுதியாகும். பண வீக்கம் அதிகரிக்கும்.

சுக்ரன் : வருஷ ஆரம்பம் வக்ரீ. சித்திரை 9 வக்ர நிவர்த்தி. ஆரம்பம் முதல் ஆவணி 6 வரை மீன – மேஷ – ரிஷப மிதுனங்களில் ஸஞ்சரிக்கும் காலம் ஸ்திரீ ஜன முன்னேற்றம் ஏற்படும். ஆவணி 6 முதல் ஐப்பசி 18 வரை கடக – சிம்ம – கன்னிகளில் ஸஞ்சரிக்கும் ஸமயம் பண்டிதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நன்மை ஏற்படும். கலைகள் விருதியாகும். விவசாயம் செழிக்கும். ஐப்பசி 19 முதல் தை 1 வரை துலா – விருச்சிக – தனுசுகளில் ஸஞ்சாரம் செய்கையில் உள்நாட்டு குழப்பம் ஏற்பட்டு நிவர்த்தியாகும். வியாபாரிகளுக்கும், கலைஞர்களுக்கும் நன்மை ஏற்படும். தை 2 முதல் வருஷ முடிய மகர – கும்ப – மீன – மேஷங்களில் ஸஞ்சரிக்கும் காலம் ஸத்கார்யங்க அபிவிருத்தி ஆகும். விவசாயம் செழிக்கும். காற்றுடன் பலத்த மழை பெய்யும். வியாபாரத்திலும், கலைகளிலும் முன்னேற்றம் ஏற்படும்.

சனி : வருஷ ஆரம்பம் கும்பம். வைகாசி 28 வக்ர ஆரம்பம். ஐப்பசி 5 வக்ர மாக, மகர ப்ரவேசம். ஐப்பசி 12 வக்ர நிவர்த்தி. ஐப்பசி 19 முதல் வருஷ முடிய கும்பம். இவ்வருஷம் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படும். யந்திர அபிவிருத்தி ஏற்படும். இரும்பு விலை ஏறும். ஜனங்களுக்கு முன்னேற்றம் உண்டாகும்.

ராகு – கேது : வருஷ முழுவதும் ராகு விருச்சிகத்திலும், கேது ரிஷபத்திலும் ஸஞ்சரிப்பதால் தெய்வ பக்தி அதிகரிக்கும். ப்ரயத்ன கார்யம் வெற்றி அடையும். ஜனங்களுக்கு நன்மை உண்டாகும்.

சுபம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கிரஹங்களின் உதய அஸ்தமனங்கள்

அங்காரகன்: ஐப்பசி 4 மேற்கே அஸ்தமனம் ; பங்குனி 18 கிழக்கே உதயம்.

புதன்: சித்திரை 17 கிழக்கே மஹாஸ்தமனம், வைகாசி 11 மேற்கே உதயம். ஆனி 20 மேற்கே வக்ராஸ்தமனம். ஆடி 9 கிழக்கே வக்ரோதயம். ஆவணி 3 கிழக்கே மஹாஸ்தமனம். ஆவணி 30 மேற்கே உதயம். ஐப்பசி 12 மேற்கே வக்ராஸ்தமனம். ஐப்பசி 26 கிழக்கே வக்ரோதயம். கார்த்திகை 30 கிழக்கே மஹாஸ்தமனம். தை 6 மேற்கே உதயம். மாசி 2 மேற்கே வக்ராஸ்தமனம். மாசி 14 கிழக்கே வக்ரோதயம். பங்குனி 31 கிழக்கே மஹாஸ்தமனம்.

குரு: புரட்டாசி 18 மேற்கே அஸ்தமனம். ஐப்பசி 13 கிழக்கே உதயம்.

சுக்ரன்: மார்கழி 6 கிழக்கே மஹாஸ்தமனம். தை 29 மேற்கே உதயம்

சனி: தை 26 மேற்கே மஹாஸ்தமனம், பங்குனி 1 கிழக்கே உதயம்

மகம் முதல் மூலம் வரையிலுள்ள கார்த்திகைகள்

ஆடி 32 நா. 31-35 ல் மகா கார்த்திகை. 14 நா. 21-20ல் பூரா கார்த்திகை ஞ 28 நா. 6-05ல் உத்திரா கார்த்திகை. புரட்டாசி 10 நா. 44-40ல் ஹஸ்தா கார்த்திகை. 24 நா. 17-18ல் சித்ரா கார்த்திகை. ஐப்பசி 7 நா. 43-12ல் சுவாதி கார்த்திகை. ஐப்பசி 21 நா. 3-35ல் விசாகா கார்த்திகை. கார்த்திகை 4 நா. 19-17ல் அனுஷா கார்த்திகை. கார்த்திகை 17 நா. 28-55ல் ஜேஷ்டா கார்த்திகை. 30 நா. 36-02ல் மூலா கார்த்திகை.

புத - சுக்ர ஸாமீப்யம்

வருஷ ஆரம்பம் முதல் வைகாசி 2 வரை. ஆனி 31 முதல் ஆவணி 13 வரை. ஐப்பசி 21 முதல் மார்கழி 19 வரை. தை 5 முதல் மாசி 8 வரை. புத-சுக்ரர் ஒருவருக்கொருவர் ஸமீபத்தில் ஸஞ்சரிக்கிறார்கள். இக்காலங்களில் நல்ல மழைக்கு அனுகூலமாக இருக்கும்.

மகவோட்டம்

ஸ்ரீமுக வருடம் மாசி மீ 13 (25-2-1994) வெள்ளிக்கிழமை உதயாதி நாழிகை 52-42 க்கு சந்திரன் மகத்திற்கு தெற்கே பாகை 7 கலை 2 தள்ளி ஓடும். நான்கு நக்ஷத்திரங்கள் தள்ளி ஓடுவதால் அஃகம் முழு பலிதமாம்.

குரு சுக்ர மூடம்

குரு புரட்டாசி 18 மேற்கே அஸ்தமனம். ஐப்பசி 13 கிழக்கே உதயம். சுக்ரன் மார்கழி 6 கிழக்கே மஹாஸ்தமனம். தை 29 மேற்கே உதயம்.

ஆதாய விரயம்

இராசி	ஆதாயம்	விரயம்
மேஷம், விருச்சிகம்	05	05
ரிஷபம், துலாம்	14	11
மிதுனம், கன்னி	02	11
கடகம்	02	02
சிம்மம்	14	02
தனுசு, மீனம்	08	11
மகரம், கும்பம்	11	05
ஆக மொத்தம்	56	47

விரயத்தைக் காட்டிலும் ஆதாயம் அதிகமாக இருத்தலால் சுக பாக்யங்கள் மிகும்.

நக்ஷத்திர கந்தாயம்

நக்ஷத்திரம்	முதல்	நடு	கடை	நக்ஷத்திரம்	முதல்	நடு	கடை
அசுவினி	1	2	2	சுவாதி	3	1	4
பரணி	4	0	0	விசாகம்	6	2	2
கிருத்திகை	7	1	3	அனுஷம்	1	0	0
ரோஹிணி	2	2	1	கேட்டை	4	1	3
மிருகசீரிஷம்	5	0	4	மூலம்	7	2	1
திருவாதிரை	0	1	2	பூராடம்	2	0	4
புனர்பூசம்	3	2	0	உத்திராடம்	5	1	2
பூசம்	6	0	3	திருஓணம்	0	2	0
ஆயில்யம்	1	1	1	அவிட்டம்	3	0	3
மகம்	4	2	4	சதயம்	6	1	1
பூரம்	7	0	2	பூரட்டாதி	1	2	4
உத்திரம்	2	1	0	உத்திரட்டாதி	4	0	2
அஸ்தம்	5	2	3	ரேவதி	7	1	0
சித்திரை	0	0	1				

பலன் – முதற் கந்தாயம் சித்திரை மாதம் முதல் ஆடி மாதம் வரையிலும், நடுக்கந்தாயம் ஆவணி மாதம் முதல் கார்த்திகை மாதம் வரையிலும் கடைக் கந்தாயம் மார்கழி மாதம் முதல் வருஷம் முடிய நடைபெறும். முதல் 0 இருந்தால் வியாதி நடு 0 இருந்தால் பயம், கடை 0 இருந்தால் தன விரயம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீமுக வருஷப் பிறப்பு பலன்

லக்ன ரீதியாக தமிழ் நாட்டிற்கும், ராசிப்படி உலக முழுவதற்கும் பலன் எடுத்துக் கொள்ள வேண்டும். சென்னையில் வருஷ ஆரம்ப லக்னம் துலாம். வருஷ ஆரம்ப ராசி தனுசு. வருஷ ஆரம்ப நவாம்சம் ரிஷபம்.

சுக்(வ) புத	சூரி	கேது	அங்
சனி	ராசி		
சந்	ராகு	ல	குரு(வ)

	சூரி	ல குரு	அங்
	நவாம்சம்		கேது
ராகு			புத
சந்	சனி	சுக்	

லக்ன ரீதியாக : லக்ன அஷ்டமாதிபதி சுக்ரன் 9–12க்கு அதிபதி புதனுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டு 6ல் நிற்கிறார். 2–7 அதிபதி அங்காரகன் வர்கோத்தமம் 9ல் பெற்று இருக்கிறார். 3–6 அதிபதி குரு 12ல் சுக்ரனாலும் அங்காரகனாலும் பார்க்கப்பட்டு புதனுடன் பரிவர்த்தனை பெற்று நிற்கிறார். 4–5 அதிபதி சனி 5ல் ஆக்ஷியாய் இருக்கிறார். 9–12 அதிபதி புதன் நீசபங்கம் பெற்று உச்ச சுக்ரனுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டு நிற்கிறார். 10 அதிபதி சந்திரன் குருகேந்திரத்தில் 3ல் இருக்கிறார். 11 அதிபதி சூரியன் 7ல் உச்சமும் வர்கோத்தமும் அடைந்து நிற்கிறார். ராகு 2லும், கேது 8லும் நிற்கிறார்கள். இராசிப்படி : 1–4 அதிபதி குரு புதனுடன் பரிவர்த்தனை அடைந்து அங்காரகனாலும், சுக்ரனாலும் பார்க்கப்பட்டு 10ல் நிற்கிறார். 2–3 அதிபதி சனி 3ல் ஆக்ஷியாய் இருக்கிறார். 5–12 அதிபதி அங்காரகன் வர்கோத்தமம் பெற்று 7ல் இருக்கிறார். 6–11 அதிபதி சுக்ரன் புதனுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டு உச்சமாய் 4ல் நிற்கிறார். 7–10 அதிபதி புதன் நீச பங்க ராஜயோகம் பெற்று குருவுடன் பரிவர்த்தனை அடைந்து உச்ச சுக்ரனுடன் கூடி 4ல் இருக்கிறார். 8 அதிபதி சந்திரன் வர்கோத்தமும் கஜகேஸரி யோகமும் பெற்று 1ல் நிற்கிறார். 9 அதிபதி சூரியன் வர்கோத்தமம் பெற்று உச்சமாய் 5ல் நிற்கிறார். ராகு 12லும் கேது 6லும் நிற்கிறார்கள். இதனால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டு நிவர்த்தி ஆகும். இயந்திர உற்பத்தி பெருகி ஆசிரியர்களுக்கும், கலைஞர்களுக்கும் நல்ல முன்னேற்றம் காணும். சத்காரியங்கள் பரவி நாட்டிற்கு நன்மையும், முன்னேற்றமும் காணும்.

வருஷ தான்யாதிகள்

வருஷ தன்யாதி		தேச சுகம்	13	விசுவாசகாதம்	06	பிறர் கொலை	06	இரும்பு	08
களின் பர்ண		சோர பயம்	09	நைஷ்டிகம்	03	தற்கொலை	06	துத்திநாகம்	10
பாலன் 19–ல்		சோர நாசம்	02	தகை	06	அபமிருந்து	13	ஈயம்	10
வருஷம்	15	அக்னி பயம்	01	நிர்தாக்ஷண்யம்	04	காலமிருந்து	15	ரஸம்	09
தான்யம்	11	அக்னி சாந்தி	02	ஞானம்	11	சாகஸம்	11	மாணிக்கம்	11
சீதம்	11	துஷ்டநிக்ரகம்	07	அஞ்ஞானம்	13	சௌக்கியம்	04	வஜ்ரம்	03
தாபம்	09	சிஷ்ட பரி		பிராணி சுகம்	05	எலி	07	வைடூரியம்	03
உஷ்ணம்	11	பாலனம்	04	பிராணி துக்கம்	04	விட்டில்	09	மரகதம்	15
மாருதம்	13	பசி	05	மழை	08	கிளி	05	நீலம்	13
ப்ரஜா விருத்தி	15	தாகம்	03	புஷ்கலம்	10	குதிரை	07	கோமேதகம்	05
ப்ரஜா நாசம்	15	நித்திரை	03	பிரதிஷ்டை	10	யானை	09	புஷ்பராகம்	03
ராஜவிட்வரம்	11	சோம்பல்	11	அப்ரதிஷ்டை	07	பசு	03	முத்து	03
உக்ரம்	05	உத்தியோகம்	07	அதிவிருஷ்டி	09	எருமை	06	பவளம்	15
புண்யம்	05	சாந்தம்	09	அனாவிருஷ்டி	06	பிராம்மணர்	03	வஸ்திரம்	15
பாவம்	05	குரோதம்	15	ஸ்தாவரம்	15	க்ஷத்திரியர்	06	ஸஸ்யவிருத்தி	11
வியாதி	13	இடம்பம்	15	ஜங்கமம்	13	வைசியர்	09	க்ஷயம்	03
வியாதி சாந்தி	09	மித்திரத்துவம்	11	மகோற்பாதம்	07	சூத்திரர்	03	ராஜபுஜயம்	03
ஆசாரம்	09	மித்ரபேதம்	03	மின்னல்	05	பொன்	10	ராஜமான்யம்	15
அனாசரம்	07	ரஸ நிஸ்பத்தி	15	சிலாவர்ஷம்	03	வெள்ளி	06	அண்டகம்	05
ஜனனம்	09	பல நிஷ்பத்தி	05	மேகர்ஜிதம்	09	தாமிரம்	06	ஸ்வேதம்	07
மரணம்	11	உற்சாகம்	07	மிருக பாதை	13	வெண்கலம்	04	உற்பிஜம்	11
தேசஉபத்ரவம்	11	விஸ்வாசம்	07	மிருக நாசம்	13	உருக்கு	04	ஜராயுதம்	11

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மகர சங்கராந்தி பலன்

பெயர் மஹோதரி, ஜனகெடுதி வர்ணம் – வைச்யவர்ணம் – வைச்யபீடை; ஸ்நானம் – பில்வஜலம், பீடை; வஸ்திரம் – அருணம் ஜனசுகம்; கந்தம் – கோரோஜனம், ஜன சுகம்; ஆபரணம் – வஜ்ரம் பீடை; புஷ்பம் – மல்லிகை, நன்மை; பாத்திரம் – இரும்பு, இரும்பு விலை ஏற்றம்; போஜனம் – அப்பம், பீடை; ஆயுதம் – தண்டம் வீரர் பீடை; வாகனம் – கழுதை, பீடை; குடை – நீலம், நலம்; சாமரம் – சியாமளம், நன்மை; வாத்தியம் – டிண்டிபம், கலைஞர் பீடை; தூபம் – கற்பூரம், சுகம்; முகம் – விரக்தி, கெடுதி; கதி – கீழ்நோக்கு, சர்வார்த்த சித்தி; திருஷ்டி – தெற்கு, நலம்; திசை – கிழக்கு, ஜன மேன்மை; பக்ஷம் – சுக்லம், நலம்; திதி – த்ரிதியை, நன்மை; நக்ஷத்திரம் – அவிட்டம், பீடை; யோகம் – ஸித்தி, நலம்; கிழமை – வெள்ளி, மழை மிகுதி; காலம் – பகல், நன்மை; லக்னம் – மகரம், நலம்.

இவ்வருஷ மகர சங்கர மண விசேஷத்தால் திருவோணம், அவிட்டம், சதயம் இம்மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்கு தன க்ஷயமும், பூரட்டாதி முதல் ஆறு நக்ஷத்திரக்காரர்களுக்கு தன லாபங்களும், ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை நக்ஷத்திரக்காரர்களுக்கு ஸ்தான நாசமும், புனர்பூசம் முதல் ஆறு நக்ஷத்திரக்காரர்களுக்கு பதவி சித்தியும், ஹஸ்தம், சித்திரை, சுவாதி நக்ஷத்ரக்காரர்களுக்கு ராஜ கோபமும், விசாகம் முதல் ஆறு நக்ஷத்திரக்காரர்களுக்கு அரசாங்க ஆதரவும் உண்டாகும்.

ஸ்ரீமுக வருஷ விவசாய விஷயங்கள் *(இதில் காட்டும் எண்கள் தேதிகளைக் குறிப்பவை)*

மாடு வாங்க : சித்திரை 10, 12 காலை, 13, 19, 20 வைகாசி 3 காலை, 10, 13, 20, 24, 29, 32. ஆனி 2 மாலை, 7 மாலை, 10, 11, 14 மாலை, 16, 25, 30 காலை. ஆடி 6 மாலை, 8, 13, 15, 21 மாலை, 24, 25, 29, 31. ஆவணி 3, 4, காலை, 6, 17 மாலை, 21, 23 மாலை, 27. புரட்டாசி 6 காலை, 17 காலை, 20, 24 மாலை, 27, 30 மாலை. ஐப்பசி 5, 9, 26, 30. கார்த்திகை 11, 29 மாலை. மார்கழி 4, 8, 15, 18 மாலை, 19 காலை. தை 18 மாலை, 20, 24 மாலை, 25 காலை. மாசி 1, 5, 9 காலை, 11, 12 காலை, 18, 20 காலை, 22 மாலை. பங்குனி 2, 10, 26, 31.

கிருஷி ஆரம்பம் – உழவு செய்ய: சித்திரை 12 காலை, 20, 29. வைகாசி 10, 13, 20, 24 காலை, 28, 29. ஆனி 10, 16, 17. ஆடி 8 மாலை 15, 24, 31. ஆவணி 4 காலை, 6 காலை, 18, 23 மாலை, 27 மாலை. புரட்டாசி 11, 27 மாலை. ஐப்பசி 9, 11 மாலை 12 காலை 26. கார்த்திகை 9, 25. மார்கழி 1 காலை, 2 மாலை, 19 மாலை. தை 18 மாலை. 20 மாசி 11, 12 காலை, 19, 20 காலை, 25 பங்குனி 10.

எருவிட: சித்திரை 19 மாலை, 20 காலை, 24 வைகாசி 4 மாலை, 11, 13, 19. ஆனி 7, 8. ஆடி 8 மாலை, 13, 31. ஆவணி 4 காலை, 6 காலை, 18, 27. புரட்டாசி 5 காலை, 22 காலை, 24 மாலை, 27 மாலை. ஐப்பசி 11 மாலை, 12 காலை, 30 காலை. கார்த்திகை 3 மாலை, 9, 16 காலை. மார்கழி 1 காலை,15, 20 காலை. தை 4 மாலை, 5 காலை. மாசி 11, 12 காலை, 20 காலை, 29 மாலை. பங்குனி 10

விதை விதைக்க : சித்திரை 4. வைகாசி 3 மாலை, 4 காலை, 29, 32. ஆனி 7 மாலை, 10, 26 மாலை. ஆடி 6 மாலை 25, 29. ஆவணி 15, 18, 27 மாலை. புரட்டாசி 11, 14, 17 காலை, 20 மாலை, 26 ஐப்பசி 11 மாலை, 12 காலை, 14, 17 கார்த்திகை 9, 11, 15, 16 காலை, 19 காலை. மார்கழி 3, 9 காலை, 13 காலை. தை 4, 16. மாசி 11 மாலை, 12 காலை, 14 காலை. பங்குனி 1, 5, 9, 29 பகல்.

பவ வருட முன் 3 மீ சுபமுகூர்த்தங்கள்

சித்திரை	5	18.4.94	திங்–சுக்–ஸப்–புன–மிது–(ம 9 1/2 – 10 1/2) நா. 9 – 10 1/2.
	8	21.4.94	வியா–சுக்–தச–மக–ரிஷ–(ம 7 3/4 – 9 1/4) நா. 4 – 8
	19	2.5.94	திங்–பகு–ஸப்–சிர–ரிஷ–(ம 7 1/2 – 8 1/2) நா. 4 – 6 பஞ்சக ப்ரீதி
	29	12.5.94	வியா–சுக்–த்வி–ரோ–மிது–(ம 9 – 10) நா. 8 – 10 1/2
வைகாசி	2	16.5.94	திங்–சுக்–பஞ்–புன–ரிஷ–(ம 6 – 7) நா. 1/2 – 3
	15	(29.5.94)	ஞா–பகு–பஞ்–உரா–ரிஷ–(ம 5 3/4 – 6 3/4) நா. 0 – 2
	20	3.6.94	வெள்–பகு–தச–உட்–மிது–(ம 8 – 9) நா. 8 – 10 1/2
	29	12.6.94	ஞா–சுக்–த்ரி–புன–மிது–(ம 6 1/2 – 8) நா. 2 – 5 1/2
ஆனி	5	19,6,94	ஞா–சுக்–தச–சித்–மிது–(ம 7 – 7 1/2) நா. 3 – 4 1/2
	19	3.7.94	ஞா–பகு–தச–அசு–மிது–(ம 5 3/4 – 6 3/4) நா. 0 – 2
	22	6.7.94	புத–பகு–த்ர–ரோ–கட–(ம 6 3/4 – 7 1/4) நா. 2 – 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீமுக (1993– 1994) விவாஹாதி சுபமுகூர்த்தங்கள்

சித்திரை	5	18.4.93	ஞா–க்ரு–த்வா–பூட்–மிது–(ம 9 3/4 – 10 1/2) நா. 9–11
	20	3.5.93	திங்–சுக்–த்வா–உத்–கட–(ம 12–12 3/4) நா. 15 1/4 – 17
	29	12.5.93	புத–க்ரு–ஸப்–திஒ–மிது–(ம 9–10) நா. 8–10 1/2
வைகாசி	4	17.5.93	திங்–க்ரு–ஏகா–உட்–மிது–(ம 9–9 3/4) நா. 8 – 9 3/4
	13	26.5.93	புத–சுக்–பஞ்–பூச–கட–(ம 9 1/2 – 10) நா. 9 1/2 – 10 1/2 சனி ப்ரீதி
	20	2.6.93	புத–சுக்–த்ர–சுவா–கட–(ம 9 1/2 – 11) நா. 8 1/2 – 10 1/2 சனி ப்ரீதி
	24	6.6.93	ஞா–க்ரு–த்வி–மூல–கட–(ம 9 – 9 3/4) நா. 8 1/4 – 10 சனி ப்ரீதி
ஆனி	10	24.6.93	வியா–சுக்–பஞ்–மக–கட–(ம 7 1/2 – 9) நா. 4 1/2 – 8 பஞ்சக ப்ரீதி
	17	1.7.93	வியா–சுக்–த்ர–அனு–கட–(ம 7 1/2–8 1/2) நா. 4 1/2 – 6 1/2 பஞ்சகப்ரீதி
ஆடி	15	30.7.93	வெள்–சுக்–த்வா–மூல–கன்–(ம 9 1/4 – 10) நா. 8 1/2 – 10 1/2 சீமந்தம்
	18	2.8.93	திங்–பௌ–திஒ–கன்–(ம 9 1/2 – 10 1/4) நா. 8 – 11 சீமந்தம்
	24	8.8.93	ஞா–க்ரு–ஷஷ்–ரேவ–கன்–(ம 9 – 10) நா. 8 – 10 1/2 சீமந்தம்
	29	13.8.93	வெள்–க்ரு–தச–மிரு–கன்–(ம 9 – 10) நா. 8 – 10 1/2 சீமந்தம்
ஆவணி	4	20.8.93	வெள்–சுக்–த்ரி–உத்–கன்–(ம 8 – 9) நா. 5 – 7 1/2
	6	22.8.93	ஞா–சுக்–ஷஷ்–சித்–கன்–(ம 8 1/2 – 9 1/2) நா. 6 3/4 – 9
	27	12.9.93	ஞா–க்ரு–ஏகா–புன–கன்–(ம 71/2 – 9) நா. 4 – 7 1/4
புரட்டாசி	1	17.9.93	வெள்–சுக்–த்வி–ஹஸ்–கன்–(ம 6 1/4 – 7 1/2) நா. 1/2 – 3 1/2 சீமந்தம்
	11	27.9.93	திங்–சுக்–த்வா–அவி–கன்–(ம 6 – 7) நா. 0 – 2.1/2 சீமந்தம்
ஐப்பசி	2	18.10.93	திங்–சுக்–த்ரி–அனு–துலா–(ம 6 – 7) நா. 0 – 2 1/2
	9	25.10.93	திங்–சுக்–ஏகா–சத–விரு–(ம 9 – 9 3/4) நா. 7 – 9
	11	27.10.93	புத–சுக்–த்ர–உட்–தனு–(ம 10 3/4 – 11 3/4) நா. 11 3/4 – 14
	12	28.10.93	வியா–சுக்–த்ர–உட்–விரு–(ம 9 – 9 1/2) நா. 7 1/4 – 8 1/2
	26	11.11.93	வியா–க்ரு–த்வா–ஹஸ்–தனு–(ம 9 – 10 1/2) நா. 7 1/4 – 10
கார்த்திகை	4	19.11.93	வெள்–சுக்–ஷஷ்–திஒ–தனு–(ம 8 1/4 – 9) நா. 5 – 6 1/2
	23	8.12.93	புத–க்ரு–தச–ஹஸ்–மக–(ம 9 1/4 – 10 1/4) நா. 7 1/2 – 10
	25	10.12.93	வெள்–க்ரு–த்வா–சுவா–மக–(ம 9 – 10) நா. 7 – 9 1/2
மார்கழி	1	16.12.93	வியா–சுக்–த்ரி–உத்–கும்–(ம 9 – 10 1/2) நா. 6 – 10 சீமந்தம்
	4	19.12.93	ஞா–சுக்–ஷஷ்–சத–மக–(ம 8 1/2 – 10) நா. 5 – 8 1/2 சீமந்தம்
	23	7.1.94	வெள்–க்ரு–தச–சுவா–தனு–(ம 6 1/2 – 7 1/4) நா. 0 – 2 சீமந்தம்
தை	20	2.2.94	புத–க்ரு–ஸப்–சித்–கும்–(ம 7 1/2 – 9 1/4) நா. 2 – 6 1/2
	25	7.2.94	திங்–க்ரு–த்வா–மூல–மக–(ம 7 – 7 3/4) நா. 1 – 2 1/2
மாசி	9	21.2.94	திங்–சுக்–தச–மிரு–கும்–(ம 6 1/2 – 7 1/2) நா. 0 – 2 1/2
	11	23.2.94	புத–சுக்–த்வா–புன–மீன–(ம 9 – 9 1/2) நா. 6 – 7 1/2 குரு ப்ரீதி
	18	2.3.94	புத–க்ரு–பஞ்–சுவா–மீன–(ம 7 – 7 1/2) நா. 1 1/4 – 2 1/2 குரு ப்ரீதி
பங்குனி	10	23.3.94	புத–சுக்–ஏகா–பூச–மிது–(ம 9 1/2 – 10) நா. 8 – 9 1/4 ராகு ப்ரீதி
	18	31.3.94	வியா–க்ரு–பஞ்–அனு–மீன–(ம 6 – 7 1/4) நா. 0 – 2 1/2 குரு ப்ரீதி

* பவ வருஷ முன் 3 மாத சுபமுகூர்த்தங்கள் எதிர்பக்கத்தில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கிரஹணங்கள்

இவ்வருஷம் இப்பூவுலகில் 2 பார்சுவ சூரிய கிரஹணகளும், 2 பூர்ண சந்திர கிரஹணங்களும் நிகழும். இவற்றுள் ஒரு பூர்ண சந்திர கிரஹணம் மட்டும் இந்தியாவில் தெரியும்.

(1) **பார்சுவ சூரிய கிரஹணம்** (தெரியாது) ஸ்ரீமுக வருஷ வைகாசி 8 (21.5.1993) வெள்ளிக்கிழமை - அமாவாசை - கிருத்திகை. கேது க்ரஸ்த சூர்யோபராக புண்ய காலம். கிரஹண ஆரம்பம். இந்திய ஸ்டாண்டர்ட் நேரம் மாலை 5 ம. 49 நி. முடிவு இரவு 9 ம 49 நி.

கிரஹணம் தெரியும் இடங்கள் : தென்கிழக்குப் பகுதி நீங்கிய வட அமெரிக்கா, ஆர்டிக் பகுதிகள், க்ரீன்லாண்ட், ஐஸ்லாண்ட், வட ஆங்கிலத் தீவுகள் உள்ளிட்ட வட ஐரோப்பா, ரஷ்யாவின் வடமேற்குப் பகுதி.

(2) **கிரஸ்தோதய சந்திர கிரஹணம்** (தெரியும்) ஸ்ரீமுக வைகாசி 22 (4-6-1993) வெள்ளிக்கிழமை பௌர்ணமி - கேட்டை - ராகு க்ரஸ்த ஸோமோபராக புண்யகாலம் ஆரம்பம். இந்திய ஸ்டாண்டர்ட் நேரம் மாலை 4ம-41 நி. பூர்ண கிரஹண ஆரம்பம் மாலை 5 ம 42 நி. மத்தி மாலை 6 ம 30 நி. பூர்ண கிரஹண முடிவு இரவு 7 ம 19 நி. கிரஹண முடிவு இரவு 8 ம 20 நி. பரிமாணம் 1.567

இந்தியா, ஸ்ரீலங்கா முழுவதும் சந்திரன் கிரஹணத்துடன் உதிக்கும். அதனால் பகல் முழுவதும் ஆகாரம் உட் கொள்ளாமல் கிரஹணம் விட்ட பின் ஸ்நானம் செய்து சாப்பிடுக. ஆயில்யம், அனுஷம், கேட்டை, மூலம், ரேவதி நக்ஷத்ரக் காரர்கள் சாந்தி செய்து கொள்க.

ஸோமோபராக புண்ய காலத்தையும் ஆகார நியமத்தையும் முன்னிட்டு ஸ்ரீ ஜகத் குரு, காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ மஹா பெரியவாள் ஜயந்தி பொதுக் கொண்டாட்டம் சாந்திர வைசாக மாத அனுஷ நக்ஷத்ரம் 7 - 5 - 1993 வெள்ளியன்று என தீர்மானிக்கப்பட்டது.

பூர்ண கிரஹண முடிவு நேரமாகிய I.S.T. இரவு 7ம 19 நி. க்கு சந்திரன் உதயம் ஆகும் இடங்கள் உள்ள LV என்ற கோடு பவநகருக்கு சற்றுத் தெற்கிலும் சண்டிகருக்கு சிறிது தெற்கிலும் உள்ள இடங்கள் வழியாகப் போகிறது.

அந்த LV என்ற கோட்டிற்கு கிழக்கே உள்ள இடங்களில் சந்திர உதயம் இரவு 7 ம. 19 நி.க்கு முன் நேருவதால் அவ்விடங்களில் பூர்ண கிரஹண முடிவும் தெரியும். LV க்கு மேற்கே உள்ள பவநகர், ராஜ்கோட், அஹமதாபாத், அமிருதஸரஸ், ஸ்ரீ நகர், பிலாஸ்பூர் போன்ற இடங்களில் சந்திர உதயம் இரவு 7 ம. 19 நி.க்கு பின் ஏற்படுவதால் பூர்ண கிரஹண முடிவு தெரியாது. அவ்விடங்களில் பார்சுவ கிரஹணம் மட்டும் தெரியும். தெற்கு பர்மாவிலும், அந்தமான் நிகோபார் தீவுகளிலும், மலேயாவிலும் பூர்ண கிரஹண ஆரம்பமும் தெரியும்.

(3) **பார்சுவ சூரிய கிரஹணம்** (தெரியாது) ஸ்ரீமுக வருடம் ஐப்பசி 28 (13.11.1993) சனிக்கிழமை - அமாவாசை - விசாகம் - ராகு க்ரஸ்த சூர்யோபராக புண்ய காலம் ஆரம்பம். இந்திய ஸ்டாண்டர்ட் நேரம் இரவு 1 ம 16 நி. முடிவு பின் இரவு 5 ம. 13 நி. இது ஆஸ்திரேலியா, தென் அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலும், தென் அண்டார்டிகாவின் பெரும் பகுதிகளிலும் தெரியும்.

(4) **பூர்ண சந்திர கிரஹணம்** (தெரியாது) ஸ்ரீமுக கார்த்திகை 14 (29.11.1993) திங்கள் - பௌர்ணமி - ரோஹிணி - கேது க்ரஸ்த ஸோமோபராக புண்ய காலம். ஆரம்பம் பகல் I.S.T. 10 ம 10 நி பூர்ண கிரஹண ஆரம்பம். 11 ம 32 நி. மத்தி 11 ம. 56 நி. பூர்ண கிரஹண முடிவு. 12 ம. 20 நி. கிரஹண முடிவு பகல் 1 ம 42 நி. பரிமாணம் 1.092

கிரஹணம் தெரியுமிடங்கள் : வடக்கு, வடகிழக்கு ஆசியா, ஹவாய் தீவுகள், அமெரிக்கா, நியூசிலாந்தின் பெரும் பகுதி, வட ஆப்ரிக்காவின் மேற்குப் பகுதி, ஜப்பானின் பெரும் பகுதி. ஆர்டிக் பகுதிகள்.

புதன் ஞாயிறு கடத்தில் (Transit of Mercury across the Sun's Disc) ஸ்ரீமுக ஐப்பசி 21 (6.11.1993) சனிக்கிழமை காலை I.S.T. 8 ம. 36 நி. முதல் 10ம.17 நி வரை புதன் ஊர்ந்து செல்வதை கறுப்பு புகை படியபட்ட கண்ணாடி போன்ற தக்க சாதனங்கள் மூலம் காணலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ கண்ணப்ப சுவாமிகள் துணை

சட்டி சாமி என வழங்கும் மௌனகுரு பகவான் ஸ்ரீ கண்ணப்ப சுவாமிகள் மகிமை

குரு மகான்கள் பலர் வாழ்ந்து வந்திருக்கும் தருமமிகு சென்னைக்கு வடக்கே 16 கிமீ. தொலைவில் உள்ள புழல் ஏரி எனப்படும் ரெட்ஹில்ஸ் நீர் தேக்கத்திற்கு கிழக்கு கரைக்கு மிக சமீபமாக காவாங்கரை அமைந்திருக்கிறது. தற்போது அங்கு பர்மாவில் இருந்து வந்தவர்களின் குடியிருப்பு இல்லங்கள் தோன்றி இருக்கின்றன. இந்த இடத்திற்கு ரெட்ஹில்ஸ் வழியாக செல்லும் எல்லா பஸ்களிலும் போகலாம். பஸ் நிற்குமிடம் காவாங்கரை என்றும் கண்ணப்ப சுவாமி கோவில் என்றும் சொல்லலாம்.

சுவாமிகள் பிறப்பும், வளர்ப்பும் யாருக்கும் தெரியாது. ஓரளவு சுவாமிகள் திருவாய்மொழிந்ததில் அவர் கேரள நாட்டைச் சேர்ந்தவர் என்றும் சிறுவயதிலேயே சிங்கப்பூர், பினாங் சென்று சென்னை வழியாக செங்குன்றம் வட்டாரத்திற்கு வந்து சேர்ந்தார் எனத் தெரிந்தது. இவர் பித்தனைப் போல் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக மௌனமாக திரிந்துகொண்டிருந்தார். ஒரு கோணிதுண்டு, ஒரு சட்டி, ஒரு தகர குவளை, ஒரு தேங்காய் ஓடு, ஒரு கோல் இவைதான் இவர் உடைமை. இவருக்கு முற்புதர்களும், விஷாம்புகளும் நிறைந்த புழல் ஏரிகரை ஓரம்தான் வாசஸ்தலம், பசிநேரத்தில் குறிப்பிட்ட சில வீட்டு வாயிலில் நின்று அவர்கள் இடும் பிச்சைதான் இவர் உணவு, ஆகையால் இவர் சட்டிசாமி என அழைக்கப்பட்டார்.

சுவாமிகள் அங்கு கண்ட யோகமும், அநேக அற்புத சித்துக்களும் புரிந்து கருணையே வடிவாக அருள் நோக்குடன் காட்சியளித்து வந்தார். இவர் பெருமைகளை உணர்ந்த அன்பர்கள் இவருக்கு ஆடை உடுத்தி சமூகத்தில் நடமாட செய்தார்கள். திரு. ராகவன் ரத்தினம்மாள் என்பவரின் ஒலை குடிசை திண்ணையில் பல ஆண்டுகாலம் வசித்து வந்தார். அவர்களை அம்மா, அப்பா என்று அழைத்து வந்தார். இவர் முக்காலும் உணர்ந்த முனிவர். இவரிடம் பற்று கொண்டவர் எத்தனை மைல்களுக்கப்பாலும் இவரை பற்றி பேசினால் இங்கிருந்து கொண்டு பெயர்களை சொல்லி இவர் இவர்களுடன் இது விஷயம் பேசுகிறார் என்று சொல்லுவார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு இடம் குறிப்பிட்டு தனக்காக அதை அதற்கு உடைமையாளரான ராஜா சர் அண்ணாமலை செட்டியார் குமாரர் திரு. முத்தய்யா செட்டியார் அவர்களிடமிருந்து கிரயத்துக்கு பெற்றார். சொத்துக்குரிமையாளருக்கே தெரியாத 16 ஏக்கர் நிலம் சுவாமிகள் மூலம் அவர்களுக்குத் தெரிய வந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. இவர் வாழ்க்கை சீரடி சாயிபாபா, சுரக்காய் சுவாமிகள் வாழ்க்கைக்கு ஒப்பாக இருந்தது. இவர் அடிக்கடி ஆதிசங்கரர் பரம்பரையை சேர்ந்தது என்று கூறுவார். இவர் ஆன்மீக சக்தி பலரை இவர்பால் ஈர்த்து ஆதரவு அளித்தது.

9.10.1961 புரட்டாசி மாதம் திங்கட்கிழமை, மகாளய அமாவாசை அஸ்த நட்சத்திர நன்னாளில் பரிபூரண நிலை அடைந்தார். அவர் சொல்லியபடி அவரை அவருக்கு சொந்தமான இடத்தில் சமாதி அமைத்து வழிபட்டு வருகிறோம்.

சுவாமிகள் மீது அன்பு கொண்ட பல அன்பர்கள் சேர்ந்து, மௌன குருபகவான் ஸ்ரீகண்ணப்ப சுவாமிகள் அடியார் திருக்கூட்டம் என்ற பெயரில் ஒரு ஸ்தாபனம் பதிவு செய்து, சுவாமிகள் சமாதி நிலையம் சமீபம் சுவாமிகள் நினைவாலயம் கட்டி இதை 27.8.1978 அன்று தமிழ்நாடு கவர்னர் மேதகு ஸ்ரீபிரபுதாஸ் பட்வாரி அவர்களால் திறக்கப்பட்டு, 4.9.1978 ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுவாமிகளை தரிசிக்க வரும் அன்பர்களுக்கு தங்க வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

சுவாமிகள் ஜீவிய காலத்தில் மாலை அணிவித்து ஆசியுடன் சபரி மலைக்கு அனுப்பியதை தொடர்ந்து அடியார் திருக்கூட்டத்தின் சார்பில், விஷு, மண்டலம், மகரம் சபரி மலை யாத்திரை நடத்திவருகிறது. இந்த யாத்திரைகளுக்கு வருடாவருடம் பக்தர்கள் பெருகி வருவது சுவாமிகளின் பேரருளுக்கு சான்று.

சுவாமிகள் சமாதி நிலையத்திலும், நினைவாலயத்திலும் காலை, மாலை வழிபாடுகள் பிரதி பௌர்ணமி பூஜைகள் மற்றும் ஆண்டு குருபூஜை பெருவிழாக்கள், சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் பூஜை விசேஷமாக நடைபெற்று வருகின்றன.

இங்கே இரவு தங்கி இருந்து சென்றால் மனத்தெளிவும், குறைகள் நீங்கப்பெற்று இன்பம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. அன்பர்கள் எல்லோரும் வழிபாடுகளில் கலந்து சுவாமிகளை தரிசித்து அவர் அருளாசி பெற்று இன்புற வேண்டுகிறோம்.

மௌனகுரு பகவான் ஸ்ரீ கண்ணப்ப சுவாமிகள் அடியார் திருக்கூட்டம்.
(பதிவு எண் 51-1973)
காவாங்கரை, புழல் கிராமம், சென்னை – 600 066.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மத்வ குரு பரம்பரை புண்ய தீர்த்தங்கள்

சித்திரை 4 ஸத்ய விஜயர், 6 ஸத்ய ப்ரியர், 12 வித்யாதி ராஜர், 14 ராம சந்திரர், வைகாசி 10 ஸத்ய ஸந்தர், 24 ஸத்ய பூர்ணர், 25 ரகு வரீயர் ஆனி 4 ஸத்யா பிநவர், 8 ஸத்யாதி ராஜர், 22 ஸ்ரீ விஜயர், ஆடி 4 ஸத்யாதீசர், 10 ஸத்ய வரர், 20 ராகவேந்திரர், 31 ஸத்ய தர்மர். புரட்டாசி 9 ஸத்யாஷ்ட காமர், 29 ஸ்ரீமாதவர். ஐப்பசி 5 ஸத்ய பராயணர், 6 ஸத்ய பராக்ரமர். கார்த்திகை 8 ஸத்ய வரர், 9 வேத நிதி, 16 வித்யாதி, 27 பத்மநாபர். மார்கழி 8 ஸத்ய நிதி, 9 ஸத்யநாதர், 14 ரகு நாதர், 18 அக்ஷோப்யர். தை 10 ரகூத்தமர், 19 ஸத்ய காமர், 20 நரஹரி 27 வித்யாதீசர், 28 புரந்தர தாஸர். மாசி 7 அனந்தர். பங்குனி 2 வாதிராஜர், 5 ஸத்ய வ்ரதர், 15 ஸத்யபோதர், 17 வ்யாஸ ராயர். 29 வ்யாஸர்.

ஆழ்வார் ஆசார்யார்கள் தீர்த்தங்கள்

சித்திரை 30 திருவாய் மொழிப் பிள்ளை. ஆவணி 13 முதலாவது வானமாமலை ஸ்வாமி. புரட்டாசி 11 லோகாச்சாரியார். மார்கழி 10 பட்டர், 13 வேதாந்த தேசிகர். மாசி 8 பாஷ்யக்காரர், 24 பெரிய ஜீயர் (மணவாள மாமுனிகள்)

ஆழ்வார் ஆசார்யார்கள் (சிம்மாஸனாதிபதிகள்) திருநக்ஷத்ரங்கள்

சித்திரை 8 பெரிய பெருமாள், 9 வடுக நம்பிகள், 11 உய்யக்கொண்டார், 14 எம்பெருமானார் (உடையவர்), அப்புள்ளார், 15 முதலியாண்டார், 21 கடாம்பியாச்சான், தேவப்பெருமாள், நாடாதூர் அம்மாள், ஆனந்தாழ்வார். வைகாசி 9 திருக்கோட்டியூர் நம்பி, 20 பெரிய திருமலை நம்பி, அழகிய சிங்கர், 21 திருவாய் மொழிப் பிள்ளை, பிள்ளை நம்பி, 22 பட்டர், ஸ்ரீராம் பிள்ளை, கோவில் கந்தாடைக்கண்ணன். ஆனி 9 மாறனேரி நம்பி, 14 திருவாழிப்பிள்ளை, 15 வடக்குத் திருவீதிப்பிள்ளை, திருவரங்கப் பெருமாளையர், எங்களாழ்வான், 17 ஸ்ரீமந் நாத முனிகள், 19 திருப்புளியாழ்வார். ஆடி 5 பிரதிவாதி பயங்கர அண்ணன், 8 கந்தாடை தோழப்பர், 9 பத்ரி நாராயணப் பெருமாள், 11 பக்ஷி ராஜர், பாரத்வாஜ ஸ்ரீநிவாஸ ஜீயர், 17 ஸ்ரீ ஆளவந்தார், புண்டரீகாக்ஷர், 18 தேர்க்காழ் வார், ஆவணி 24 பெரிய வாச்சான் பிள்ளை, நயினார் ஆச்சான் பிள்ளை, 25 பரவஸ்து பட்டர் பிரான், திருக்குறுகைப் பிள்ளான். புரட்டாசி 5 திருமலை நம்பி, 6 ஆதிவண்சடகோபர், 10 வேதாந்த தேசிகர், 23 முதலாவது வானமாலை ஸ்வாமி. ஐப்பசி 4 மணவாள மாமுனிகள், 5 சேனை முதலியார், திருக்குருகைப் பிரான் பிள்ளான், 7 பிள்ளை லோகாச்சாரியார், 8 திருமலையாண்டான், நடுவில் திருவீதிப்பட்டர், 9 பின்பழகிய ஜீயர், 12 வேலாஞ்சோலைப் பிள்ளை, 13 இரும்புலியப்பா, 19 கூரங் குலோத்தம தேசிகர், 22 எதிராஜ ஜீயர். கார்த்திகை 12 ஈ உண்ணி மாதவப் பெருமாள், அருளாளப் பெருமாள், 13 நம் பிள்ளை, 14 கடாம்பி நாயனார், 27 கோடி கன்னிகாதானம் தாதாசாரியார். மார்கழி 25 அழகிய மணவாளப் பெருமாள், பெரிய நம்பிகள், நல்லூர் ஆச்சான் பிள்ளை. தை 3 சொட்டை நம்பி நல்லூரான், 11 திருக்கோயிலூர் எம்பெருமானார், 13 எம்பார், 14 குரு புஷ்ய உற்சவம், 19 கூரத்தாழ்வார், 22 குருகாவலப்பன். மாசி 4 சிறிய கோவிந்தப் பெருமாள், 9 திருக்கச்சி நம்பி, 11 திருமலையாண்டான், கந்தாடையாண்டார், 13 பிள்ளை உறங்காவில்லிதாஸர், மணக்கால் நம்பி. பங்குனி 9 செல்லப் பிள்ளை, 14 நம் ஜீயர், 15 திரு அரங்கத்து அமுதனார், திரு நாராயணப் பெருமாள்.

பன்னிரு ஆழ்வார் திருநக்ஷத்ரங்கள்

சித்திரை 21 மதுர கவியாழ்வார். வைகாசி 21 நம்மாழ்வார். ஆனி 15 பெரியாழ்வார். ஆடி 8 ஆண்டாள். ஐப்பசி 7 பொய்கையாழ்வார், 8 பூதத்தாழ்வார், 9 பேயாழ்வார். கார்த்திகை 13 திருமங்கையாழ் வார், 14 திருப்பாணாழ்வார். மார்கழி 25 தொண்டரடிப் பொடியாழ்வார். தை 16 திருமழிசையாழ்வார். மாசி 11 குலசேக ராழ்வார்.

பெருமாள் நாச்சியார் திருநக்ஷத்ரங்கள்

சித்திரை 12, வானமாமலைப் பெருமாள், 15, சக்கரவர்த்தித் திருமகனார், வைகாசி 18, தேவப்பெருமாள், 20 அழகிய சிங்கர். ஆடி 8 ஸ்ரீ ஆண்டாள், ஆவணி 14 தெய்வநாயகன், 24 ஸ்ரீ கண்ணன். புரட்டாசி 10 திருவேங்கடமுடையான் பங்குனி 6, பெரிய பெருமாள், 14 வரமங்கைத் தாயார், ஸ்ரீ ரங்க நாச்சியார், 23 வடிவழகிய நம்பி, 28 நம் பெருமாள்.

நாயன்மார்கள் திருநக்ஷத்ரங்கள்

சித்திரை 4 ஸ்ரீ அப்பர், 10 சிறுத்தொண்டர், 12 மங்கையர்க்கரசியார், 14 விறல் மிண்டர், 18 சிவ ஞானஸ்வாமிகள், 21 உமாபதி சிவாசாரியார், 21 இசை ஞானியார், 22 திருக்குறிப்புத் தொண்டர், 25 குமர குருபரர். வைகாசி 7 கழற்சிங்கர், 12 நம்பியாண்டார் நம்பிகள், 13 நமிநந்தியடிகள், ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள், 14 சோமாசிமாறர், 22 திருவள்ளுவர் (திருமயிலையில்), 24 நீல கண்டயாழ்ப்பாணர், முருகர், திருநீலநக்கர், திருஞான சம்பந்தர். ஆனி 10 ஸ்ரீ மாணிக்க வாசகர், 11 அமர்நீதியார், 28 ஏயர்கோன் கலிக்காமர். ஆடி 10 பெருமிழலைக் குறும்பர், 11 ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமான், கழறிற்றறிவார், 16 கலியர், கோட் புலியர், 27 மூர்த்தி நாயனார், புகழ்ச்சோழர், 30 கூற்றுவர். ஆவணி 8 குலச்சிறையார், 10 குங்கிலியகலையர், 28 செலுத்துணையர், ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரியார், 29 புகழ்த்துணையர், அதிபத்தர், இளையான் குடிமாறர். 31 மறை ஞான சம்பந்த சிவாச்சாரியார். புரட்டாசி 9 ஏனாதி நாயனார், 12 நரசிங்க முனையரையர், 17 ருத்ரபசுபதி நாயனார், 20 திருநாளைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போவார். 27 ஸ்ரீ அருள் நீதி சிவாச்சாரியார். 29 அருட்பிரகாச ராமலிங்க சுவாமிகள். ஐப்பசி 4 ஐயடிகள் காடவர்கோன், 14 திருமூலர், 15 நின்ற சீர் நெடுமாறர். 16 இடங்கழி நாயனார். 21 சக்தி நாயனார். 28 ஸ்ரீ மெய்க்கண்ட சிவாச்சாரியார். 30 பூசலார் நாயனார். கார்த்திகை 13 கணம்புல்லர், 22 மெய்ப் பொருள் நாயனார், 24 ஆனாயர், 29 மூர்க்க நாயனார், 30 சிறப்புலி நாயனார். மார்கழி 7 வாயிலார், 14 சடையர், 20 இயற்பகை நாயனார், 22 மானக் கஞ்சாரர், 29 சாக்கியர், தை 6 கலிக்காமர், 7 ஸ்ரீ நமச்சிவாயர், 11 கண்ணப்பர், 12 அறிவாட்டர், 18 சண்டேசுவரர், திலகவதியார், 22 திருநீல கண்டர், தாயுமானவர். மாசி 14 திருவள்ளுவர், 16 எறிபத்தர், 23 காரி, 27 கோட்செங்கோட் சோழர். பங்குனி 6 சிவனேசர், 8 கணநாதர், 10 முனையடுவார், 16 காரைக்கால் அம்மையார், 25 தண்டியடிகள்.

ஜைனர்களின் முக்கிய விரதங்கள்

சித்திரை 16 சமாதி விதான நோன்பு, வைகாசி 19 பவதுக்க நிவாரண நோன்பு, ஆனி 8 மங்கள கௌரீ நோன்பு ஆரம்பம், நந்தீஸ்வர நோன்பு அஷ்டான்னிக நோன்பு ஆரம்பம், 10 பஞ்சமி நோன்பு, 11 சுக்ரவார நோன்பு, 14 சுபதசமி நோன்பு, 15 மங்கள கௌரீ விரதம் முடிவு, 17 திரிபுவன திலக நோன்பு, 19 அஷ்டான்னிக நோன்பு முடிவு. ஆடி 5 ஸப்த பரம ஸ்நான நோன்பு ஆரம்பம், 10 மேற்படி நோன்பு முடிவு, 18 உபாகர்மா, சித்த பரமேஷ்டிகன் நோன்பு, 31 ஸப்த விதான நோன்பு. புரட்டாசி 4 தசலாக்ஷணீக நோன்பு ஆரம்பம், 6 முக்தாவளி நோன்பு, நிர்துக்க ஸப்தமி நோன்பு, 9 சுகந்த தசமி நோன்பு, 10 கேவல போதி நோன்பு, 13 அனந்த விரத நோன்பு, தசலாக்ஷணீக நோன்பு முடிவு, 20 சந்தன சஷ்டி நோன்பு. ஐப்பசி 3 கர்ம நிர்ஜன நோன்பு, 6 ஜீவ தயாஷ்டமி நோன்பு, 13 சௌபாக்கிய நோன்பு, 27 பரிநிர்வாண நோன்பு, 28 தீபாவளி நோன்பு. கார்த்திகை 3 ஸ்ரீபஞ்சமி நோன்பு. 6 நந்தீஸ்வரர் பூஜா நோன்பு ஆரம்பம், 12 மேற்படி நோன்பு முடிவு. மார்கழி 6 கந்தர்ப ஸார நோன்பு, மாசி 13 மாக மாலை நோன்பு, 14 துர்கதி நிவாரண நோன்பு, 26 சிவயாத்ரா நோன்பு. பங்குனி 3 ஸ்ரீ பஞ்சமி நோன்பு, 6 நந்தீஸ்வர ஆராதனா நோன்பு ஆரம்பம், கல்யாண திலக நோன்பு ஆரம்பம், 12 மேற்படி நோன்பு முடிவு, 28 ப்ராரம்ப ஸம்யத்ஸர பூஜா, யுகாதிப் பண்டிகை. ஆனி 13 முதல் கார்த்திகை 12 வரை, நவநிதி பண்டார நோன்பு, ஆனி 13 முதல் கார்த்திகை 12 வரை நவநிதி பண்டார நோன்பு, ஆனி 18 முதல் கார்த்திகை 12 வரை பஞ்ச கல்யாணி நோன்பு.

வர்த்தமான கால தீர்த்தங்கள் பகவான்களின் ஜயந்தி

சித்திரை 1 முனித்ரய பகவான், 2 விருஷப பகவான், 9 குந்து பகவான். வைகாசி 10 சுபார்சுவ பகவான். ஆனி 2 அனந்த பகவான், 3 சாந்தி பகவான், 30 நமி பகவான். ஆடி 9 நேமி பகவான். கார்த்திகை 12 பவ பகவான், 26 பத்ம ப்ரபா பகவான், 28 புஷ்ப தந்த பகவான். மார்கழி 9 மல்லி பகவான், 12 அர பகவான். தை 24 சந்திர பிரபவா பகவான், பார்சுவ பகவான். மாசி 8 அஜித பகவான், 10 அபிநந்தன பகவான், 11 தர்ம பகவான், 12 விமல பகவான். மாசி 24 சீதளா பகவான், 25 ஸ்ரேயாம்ஸ பகவான், 27 வாசு பூஜ்ய பகவான்.

மிக முக்கியமான அறிவிப்பு

எமது பாட்டனார் நாகவேடு ஸ்ரீ முனுசாமி முதலியார் பிரசுரித்து வந்த 'ஆனந்த போதினி' பஞ்சாங்கத்தில் கொடுத்திருந்த சூரிய உதயாஸ்தமனங்கள் அங்கு குறிப்பிட்ட ஊர்களுக்கு மட்டும்தான் பயன்படும். எல்லா ஊர்களுக்கு சூரிய உதயாஸ்தமனங்கள் எளிதலறிய பல நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்க நமது 'பாலன்' பஞ்சாங்கத்தில் சூரிய பிம்பமத்ய உதய அஸ்தமன, சுதேச நேரங்கள் அக்ஷாம்சம் பாகை 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21, 23, 25, 27, 30, 33 ஆகியவைகளுக்கு குறிப்பிட்டு அவைகளைப் பயன்படுத்தி மற்ற இடங்களுக்கு கணிக்க உதாரண விளக்கங்களுடன் கொடுத்துள்ளோம்.

அவ்வாறே 'ஆனந்த போதினி' பஞ்சாங்கத்தில் கொடுத்து வந்த நக்ஷத்ர ஹோரையை அங்கு கொடுத்துள்ள இடங்களைத் தவிர மற்ற இடங்களுக்கு கணிக்க முடியாமல் அவதிப்பட்ட நேயர்களின் கோரிக்கைக்கிணங்க சென்னை சுதேச இரவு 12 மணிக்கு நமது பாலன் பஞ்சாங்கத்தில் கொடுத்து அதைக் கொண்டு மற்ற இடங்களுக்கு எளிதில் நக்ஷத்ர ஹோரை கணிக்க உபயோகமாக இருப்பதைப் பாராட்டியும் பல நேயர்கள் கருத்து தெரிவித்து உள்ளார்கள். அவர்கள் எல்லோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

மேலும், இந்தியாவில் அநேக இடங்களில் 'கிருஷ்ணமூர்த்தி பத்ததி' பிராபல்யம் அடைந்து வருகிறது. ஆதலால் பலர் விருப்பப்படி கிருஷ்ண மூர்த்தி பத்ததி அயனாம்சத்தை உபயோகித்து பஞ்சாங்கம் கணித்து வெளியிட்டிருக்கிறோம். 'ஆனந்தபோதினி' அயனாம்சத்தை இவ்வாறு மாற்றியதால் நக்ஷத்திர முடிவு நேரங்களில் சுமார் 7 அல்லது 8 விநாடிகளும், யோகம் சுமார் 15 விநாடிகளும் வித்தியாசப்படும். நேயர்களின் ஆதரவை கோருகிறோம். திதி, நக்ஷத்ர, முதலிய முடிவு நேரங்களை சந்தேகமற தெரிந்து கொள்வதற்கு கடிகார I.S.T. நேரங்களில் பகல் 1 மணி முதல் 12 மணியும், இரவு 1 மணி முதல் (மறுநாள் சூரிய உதயம் வரை) 24 மணி கூட்டியும் உதாரணங்களுடன் கொடுத்து இருக்கிறோம்.

சுபம்! சுபம்!!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சகல தேவாலய உற்சவங்கள்

சித்திரை மீ : 1 உ திருவையாறு, திருக்கழுக்குன்றம், திருக்கடவூர், திருநெல்வேலி முதலிய சகல சிவஸ்தலங்களில் சித்திரை விஷு புண்ய தீர்த்தம். திருச்செந்தூர் ஸ்ரீ ஷண்முகருக்கு அன்னாபிஷேகம், சென்னிமலை ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி இரவில் சந்தனாபிஷேகம், திருச்சி உச்சி பிள்ளையார் பால் அபிஷேகம், குரோம்பேட்டை குமரன் குன்றம் திருப்படி விழா. காஞ்சி காமாக்ஷி அம்மன் தங்க ரதம் நான்கு ராஜ வீதிகளிலும் உலா வருதல். 3. திருச்சி ஜில்லா திருப்பைஞ்சிலியில் திருநாவுக்கரசுக்கு கட்டமுது. 4. மேற்படி குருபூஜை, குடியாத்தம், திருப்புகலூர், திருப்பாதிரிப் புலியூர், திருநாவலூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் காக்ஷி, சென்னை புரசை நால்வர் உற்சவாரம்பம், பெத்து நாய்க்கன்பேட்டை வடமலை மேஸ்திரி தெரு, திருநாவுக்கரசு சபை, குடியாத்தம் சமரச சன்மார்க்க சபை (3 நாள்) ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருநக்ஷத்ர வைபவம். 7. சமயபுரம் மாரியம்மன் ரதம். 8 ஸ்ரீ வைகுண்ட தீர்த்தம். 9. திருச்செங்காட்டாங்குடி அண்டமி அமுது படையல், மண்ட கொளத்தூர் முதலிய ஸ்தலங்களில் ஸ்ரீ சங்கர ஜயந்தி, காஞ்சி சங்கர ஜயந்தி உற்சவாரம்பம், சகல ஸ்தலங்களிலும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அவதார வைபவம். 10. திருநாகை கோரக்க சித்தர் உற்சவம், வேதாரண்யம் பிக்ஷாண்டவர் உற்சவம். 11. அண்டமி தீர்த்தம். 13. சகல சிவஸ்தல உற்சவாரம்பம். 14. சீர்காழி திருமுலைப்பால், மதுராந்தகம், திருக்கம்பை, ரங்கூன், ஸ்ரீ பெரும்புதூர் உடையவர் சாற்றுமுறை, ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ ரங்கநாதர் வசந்தோற்சவம். 15. வேதாரண்யம் அகஸ்தியர் தரிசனம். 16. ஸ்ரீமுஷ்ணம் கருடன். 17. காஞ்சி, ஸ்ரீ ரங்கம் ஸ்ரீராமநவமி, தஞ்சாவூர் கலசபாக்கம் முதலிய ஸ்தல ரிஷபம், திருவையாறு, ஆத்ம பூஜை, இரவில் சதுர்முக சப்பரத்தில் ரிஷப வாகனக் காக்ஷி, சென்னை சூளைப் பட்டாளம் நெ. 60 டிமலோஸ் ரோட் தாதா காசி சதாசிவ ஆறுமுக சுவாமிகள் திருக்கோவிலில் புரசை பிரிக்ளின் ரோட், ஒட்டேரி மகா காசி க்ஷேத்திரத்தில் 80வது குரு பூஜை உற்சவம், இரவு உற்சவ மூர்த்திகள் வீதி உற்சவம், மேற்படி மாதா மாதம் சுவாமிகள் ஆயில்ய நக்ஷத்ரம். 18. சகல கன்யகா பரமேஸ்வரி அம்மன் கோவில்களில் ஸ்ரீ வாஸவி ஜயந்தி, திருக்கடவூர் காலன் சம்மாரம், பசும்பொன் மாவட்டம் கானூர் சுயம்பு மூர்த்தி பிரளய விடங்கேசுவரர் ஆலயத்தில் அறுபத்து மூவர் குருபூஜை 5ம் ஆண்டு விழா வைபவம், மதுரை தடாதகை பிராட்டியார் பட்டாபிஷேகம். 19. மதுரை தடாதகை பிராட்டியார் அஷ்டதிக்கு பாலகர்களை ஜயித்த உற்சவம், சமயபுரம் மாரியம்மன் ரதம், சகல ஸ்தலங்கள் ரதம், அவினாசி ரதம், திருமருகல் புஷ்ப பல்லக்கு, காஞ்சி (குமரக் கோட்டம்) ரதம், திருச்சி ஜில்லா திருப்பைஞ்ஞிலி முதலிய இடங்களில் ரதம், திருவஹீந்திரபுரம் கருடன். 20. மதுரை தடாதகை பிராட்டியார் திருமணம், காஞ்சி கச்சபேசர் திருமணம், திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவர் திருத்தேர். 21. மதுரை நன்னிலம் சிவாயமலை, திருமருகல் முதலிய இடங்களில் ரதம், சகல விஷ்ணு ஸ்தல உற்சவாரம்பம், கத்ரி ஆரம்பம். 22. தஞ்சாவூர், திருவையாவூர், திருக்கழுகுன்றம், திருக்கடவூர், அவினாசி, திருக்கோட்டியூர், கும்பகோணம், திருநெல்வேலி, திருக்கச்சூர், திருவேற்காடு, சீர்காழி, வேதாரண்யம், காஞ்சி, எட்டிக் குடி, திருவண்ணாமலை, மதுரை, வட திருநாகேஸ்வரம் முதலிய சிவ ஸ்தலங்களில் சித்ரா தீர்த்தம், காஞ்சி சித்திரகுப்தர் பூஜை. 23. சென்னை புரசை ஸ்ரீ கங்காதரேஸ்வரர், பூக்கடை மல்லீஸ்வரர் ஏகாம்பரநாதர், திருவொற்றியூர், சித்ரா பௌர்ணமி உற்சவம், காஞ்சி வரதர் ஐயங்கார் குளம் நடபாவி உற்சவம், சென்னை திருவல்லிக்கேணி திருவெட்டீஸ்வரர், கலசபாக்கம், திருமாமுடீஸ்வரர், செய்யாறு தீர்த்தம், திருப்பாதிரிப்புலியூர், பாடலீஸ்வரர், குடியாத்தம், நெல்லூர் பேட்டை கருப்பீலீஸ்வரர் முதலிய சிவஸ்தலங்களில் சித்ரா தீர்த்தம், திருமாலிருஞ்சோலை, மதுரை அழகர் வைகையாற்று உற்சவம், ராமநாதபுரம் மலையப்பட்டி கிருஷ்ணன் கோயில் ஐயம்பாளையம் மருத நதியில் சித்தரேவு வரதராஜர் குதிரை வாகனம், திருவஹீந்திரபுரம் திருத்தேர், ஸ்ரீ கஜேந்திர மோக்ஷம், ஸ்ரீ முஷ்ணம் தெப்பம், ராமநாதபுரம் மலையப்பட்டி ஊஞ்சல், தசாவதாரம், மண்டுக மகரிஷிக்கு ஸ்ரீ அழகர் காட்சியருளல், சென்னை 81 தண்டையார் பேட்டை நேதாஜி நகர் அருட்கோட்டம் அருள்மிகு முருகன் திருக்கோயில் சித்ரா பௌர்ணமி விழா, முன்னாள் இரவு முருகன் வீதி உலாவும், மறுநாள் சித்ரா பௌர்ணமி அன்று முருகனுக்கு காவடி சமர்ப்பித்தலும், பிறகு அன்னதானமும் நடைபெறும், சிவாயமலை முத்துப் பல்லக்கு, திருமழபாடி நந்தி தேவர் திருக்கல்யாணம், திருவையாறு ஸப்தஸ்தான காட்சி, கண்ணாடி பல்லக்கில் ஸப்தஸ்தலங்களையும் பிரதக்ஷிணம் செய்தல், ஸ்ரீபெரும்புதூர் திருவல்லிக்கேணி, திருக்கண்ணங்குடி, திருவெள்ளியங்குடி கருடன். 25 திருநீர்மலை, திருவிடந்தை கருடன், பொன்னேரி சந்திப்பு உற்சவம். 27. திருவல்லிக்கேணி, ஸ்ரீ.பெரும்புதூர், திருவெள்ளியங்குடி, திருக்கண்ணாங்குடி, திருக்கண்ண மங்கை, திருநீர்மலை, திருவிடந்தை, பவானி முதலிய இடங்களில் திருத்தேர். 28. இளையனார் வேலூர் ஸ்ரீ பால சுப்ரமண்ய சுவாமி பாலூர் திருவூரல் உற்சவம். 29. திருவண்ணாமலை, கும்பகோணம், முதலிய ஸ்தலங்களில் ஸ்ரீ நடராஜர் அபிஷேகம், ஸ்ரீரங்கம் கருட சேவை, சகல விஷ்ணு ஸ்தல தீர்த்தம், சென்னை வண்ணாரப்பேட்டை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமி 158வது மஹா குரு பூஜை விழா.

வைகாசி மீ : 1 உ குடியாத்தம் கங்கை அம்மன் திருவிழா. காஞ்சி வைகுண்டப் பெருமாள் உற்சவாரம்பம். 8. சென்னை கொண்டியம்பதி மோகன வடிவேல் பக்த ஜன சபையாரால் வைகாசி கிருத்திகையன்று (காலை) காவடி புறப்பட்டு அயன்புரம் மேல் பழனி ஆண்டவருக்கு (மாலை) காவடி சமர்ப்பணமும் (இரவு) பழனி ஆண்டவர் இராஜ அலங்காரம் செய்து தங்க விமானத்தில் எழுந்தருளும் விழா. 12. சென்னை புரசை வேலூர் ஜலகண்டேஸ்வரர், திருவையாறு, திருவிடைமருதூர், தஞ்சாவூர், மாயவரம், காஞ்சி (குமரக் கோட்டம்), திருச்செந்தூர், மதுரை, திருப்பாதிரிப்புலியூர், பாடலீஸ்வரர் முதலிய ஸ்தல உற்சவாரம்பம். 13. நன்னிலம், அம்பல், திருமாகாளம், திருக்கண்ணமங்கை, திருக்குருகூர், மதுரை, ஆழ்வார் திருநகரி முதலிய ஸ்தலங்களில் உற்சவ ஆரம்பம், குன்றத்தூர் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் திருநக்ஷத்ர

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைபவம், சென்னையில் ஸ்ரீ சேக்கிழார் சந்திப்பு உற்சவம். 14. நன்னிலம் அம்பல் சோமாசிமாரர் யாகம். 15. மேற்படி நிர்மால்ய உற்சவம், கத்ரி முடிவு. 17. திருவகீந்திரபுரம் கருடன், திருக்கண்ணபுரம் கருடன் நவதிருப்பதி, ஆழ்வார் திருநகரி, தஞ்சாவூர் கருட சேவை. 18. காஞ்சி (குமரக்கோட்டம்) ரதம். 19. திருக்குருகூர் ஆழ்வார் ஹம்ச வாகனம், சிங்கப்பெருமாள் கோவில் (காலையில்) நாச்சியார் கோலம் (இரவில்) அன்னக்கூடம், காஞ்சி வரதர், சித்திரக்கூடம், ஸ்ரீவில்லிப்புத்தூர், திருக்கண்ணபுரம், திருமெய்யம், கடுக்கலூர் முதலிய ஸ்தல உற்சவாரம்பம். 20. காஞ்சி (குமரக்கோட்டம்) மாவடி சேவை, திருப்பாதிரிப்புலியூர், பாடலீஸ்வரர் ரதம். 21. சித்திரக்கூடம், பூவிருந்தவல்லி, காலடிப்பேட்டை, மீஞ்சூர், காஞ்சி வரதர் கருட சேவை, சகல ஸ்தலங்களிலும் வைசாக தீர்த்தம், திருவண்ணாமலை தெப்பம், திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஆண்டவர் கோயில் பாலாபிஷேகம். 22. காஞ்சி ஏகாம்பரநாதர் சர்வ தீர்த்தத்தில் தெப்பம், திருப்பரங்குன்றம் மொட்டையரசு உற்சவம். 23. ஸ்ரீமுஷ்ணம் ஜேஷ்டாபிஷேகம். 24. திருவண்ணாமலை முதலிய ஸ்தலங்களில் திருஞான சம்பந்தர் உற்சவம், திருச்செங்கோடு (இரவில்) ஸத்தாவரணம். 25. திருச்செங்கோடு அர்த்த நாரீஸ்வரர் அருணோதயத்தில் மலைக்கு எழுந்தருளல். காஞ்சி வரதர் தேர். 27. காஞ்சி வரதர், சித்திரக்கூடம், திருமெய்யம், திருக்கண்ணபுரம், ஸ்ரீ வில்லிப்புத்தூர் தீர்த்தவாரி. 29. காஞ்சி வைகுண்டப் பெருமாள் கருட சேவை.

ஆனி மீ : 1 உ பட்டீஸ்வரம் முத்துப்பந்தல், 3. சிதம்பரம், ஆவுடையார் கோயில், திருவண்ணாமலை, வேதாரண்யம், மதுரை, சென்னை, காசி விஸ்வநாதர், ஜம்புகேஸ்வரம், லால்குடி, திருக்கழுகுன்றம் முதலிய ஸ்தல ஆனித் திருமஞ்சன உற்சவாரம்பம். 5. திருவள்ளூர் வீரராகவர் தெப்பம். 8. காஞ்சி வரதர் கோடை உற்சவாரம்பம், திருநாகை புண்டரீக மஹரிஷி ஐக்கிய உற்சவம். 10. ராயவேலூர் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் பிரம்மோற்சவாரம்பம், திருவண்ணாமலை முதலிய இடங்களில் ஸ்ரீ மாணிக்க வாசகர் உற்சவம், திருக்கழுகுன்றத்தில் திருமுறை விழா, மதுரை ஊஞ்சல் உற்சவாரம்பம், திருநெல்வேலி, வேதாரண்யம் உற்சவாரம்பம், சென்னை கங்காதரேஸ்வரர் வசந்த உற்சவாரம்பம். 12. சகல தேவாலயங்களில் ஸ்ரீ நடராஜர் ஆனித் திருமஞ்சனம். 14. திருவள்ளூர் வீரராகவர் ஜேஷ்டாபிஷேகம், காஞ்சி வரதர் சுதர்சன ஜயந்தி, திருவல்லிக்கேணி, நரசிம்ம சுவாமி, மதுரை கோதண்டராம சுவாமி உற்சவாரம்பம். 15. பெரிய குளம் கௌமாரி அம்மன் கம்பம் நாட்டி உற்சவம் (15 தினங்கள்), காஞ்சி வரதர், திருவள்ளூர் ஆனிக் கருடன் ஸ்ரீவில்லிப்புத்தூர் பெரியாழ்வார் தீர்த்தவாரி. 16. திருவல்லிக்கேணி நரசிம்ம சுவாமி கருடன். 18. ஸ்ரீ ரங்கம் ஜேஷ்டாபிஷேகம், பெருங்களத்தூர் கருடன். 19. மதுரை ஊஞ்சலூற்சவ தீர்த்தம், மன்னார் குடி தெப்பம், சென்னை சைதாப்பேட்டை, காங்கேய நல்லூர் ஸ்ரீ அருணகிரிநாதர் உற்சவம், காரைக்கால் அம்மையார் மாங்கனி உற்சவம், ராயவேலூர் சுந்தரேஸ்வரர் ப்ரம்மோற்சவ தீர்த்தம், சென்னை புரசை கங்காதரேஸ்வரர் தீர்த்தம், காஞ்சி காமாக்ஷி அம்மன் வியாஸ பூஜை, காலையில் ஸ்ரீ ஆசார்ய மூர்த்தி சர்வ தீர்த்த கரைக்கு எழுந்தருளல். 20. திருவல்லிக்கேணி நரசிம்ம சுவாமி ரதம், மதுராந்தகம் கோதண்டராமர் ரதம். 22. காஞ்சி வரதர் ஜேஷ்டாபிஷேகம், திருவல்லிக்கேணி நரசிம்ம சுவாமி தீர்த்தம். 23. திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் அயனோற்சவ த்வஜாரோஹணம். 26. ஸ்ரீ வில்லிப்புத்தூர் பெரியாழ்வார் உற்சவாரம்பம். 28. திருநாகை சப்த ஸ்தானம். 30. சகல ஸ்தல ஆடிப்பூர உற்சவாரம்பம்.

	10	26	11–42P	43–17	தெற்கு	5–44	அங்
	10	26	4–11A	54–30	"	6–00	சனி
	13	29	5–40P	28–15	"	4–37	சுக்

பங்குனி

	உ	உ	ம. நி.	நா.வி.	திக்கு	பா.க.	கிரக
	29	16	3–04A	52–12	வடக்கு	2–17	குரு
ஏப்ரல்	3	21	2–45A	51–35	தெற்கு	3–47	நெப்
	4	22	7–56A	4–32	"	4–49	யுரே
	7	25	4–00P	24–47	"	6–04	சனி
	8	26	2–29A	51–02	"	5–00	அங்
	9	27	9–59A	9–48	"	6–09	புத
	12	30	4–11A	55–22	"	0–59	சுக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகாயக் காட்சி (70-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குறிப்பு :-- இங்கு சமாகம காலம் உதயாதி நாழிகை - விநாடிகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உதயாதி நாழிகை - விநாடிகளை மணி - நிமிஷங்களாக்கி சூரியோதய மணி - நிமிடங்களுடன் கூட்ட சமாகம கால மணி நிமிஷங்கள் வரும். இது இந்தியாவிற்கும் - இலங்கைக்கும் பொருந்தும். பர்மா-பினங்கு ஆகிய இடங்களுக்கு முறையே மணி-1, 2 கூட்டவும்; மொரீஷியஸ்-தென் ஆப்பிரிக்கா ஆகிய இடங்களுக்கு முறையே மணி 1½, 3½ கழிக்கவும். அவ்விதஞ்செய்ய அந்தந்தப் பிரதேசங்களில் சமாகம காலம் வரும். இப்படிக் கிடைத்த சமாகம காலம் தோராயமானது. ஏனென்றால் சமாகமக் கிரகங்களுக்கு இலம்பனம் (பேரேலக்ஸ்) செய்யவில்லை. இலம்பனம் வேண்டிய இடங்களுக்குக் கவனித்துக்கொள்ள வேண்டுவதாகும். இதனால் சமாகம காலத்தைத் துல்லியமாகக் கண்டுகொள்ளலாம். அதன் விவரமாவது :—

சந்திரன் உச்சிக்கு நேராக விருக்கும் பொழுது அதன் இலம்பனம் பூஜ்யமாகும். உச்சிவான் மத்திய ரேகைக்குக் கிழக்கில்-அல்லது மேற்கில் சந்திரன் செல்லச் செல்ல அதன் இலம்பனம் பூஜ்யத்திலிருந்து அதிகரிக்கும். உச்சியிலிருந்து கிழக்கில் உதயரேகை-அல்லது மேற்கில் அஸ்தமன ரேகை மட்டும் அந்தக் கால அளவு சுமார் இரண்டு மணி நேரமென்று வைத்துக் கொள்ளலாம். அந்த அளவில் சமாகம காலத்தில் சந்திரன் உச்சிக்கு மேற்கில்-அல்லது கிழக்கில் உச்சிவான் மத்தியரேகையிலிருந்து நிற்கும் தூரத்திற்கு வரும் ஈவு இலம்பனமாகும். சந்திரன் உச்சிக்குக் கிழக்கில் இருந்தால், அதன் ஈவை மேலே காட்டியுள்ள சமாகம் காலத்தில் கழிக்கவும். மேற்கிலிருந்தால் கூட்டவும். இவ்விதம் செய்யவேண்டிய இடத்திற்குத் துல்லியமாக சமாகம் காலத்தைக் கண்டு கொள்ளலாம். சந்திரனைத் தவிர இதர கிரகங்களுக்குங்கூட இலம்பனஞ் செய்ய இன்னும் மிகத் துல்லியமாக சமாகம காலம் வரும்.

சித்திரைமீ பிறப்பின் பலன் :–சித்திரைமீ பிறப்பு ஞாயிறாகில் அற்ப மழை, திங்களாகில் வெள்ளங்காணும், செவ்வாயாகில் கலகமுண்டு, புதனாகில் காற்றதிகம், வியாழனாகில் சுபமுண்டு, வெள்ளியாகில் பெரு மழை, சனியாகில் மழையில்லை.

வருஷ மகாதசை :—ஜனன நக்ஷத்திர முதல் பங்குனிப் பூர்வபக்ஷப் பிரதமை அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணி 5-ல் பெருக்கி 9-ல் கொடுத்த மிச்சம், 1-க்கு சூரியன் நாள் 20. 2-க்கு செவ்வாய் நாள் 28, 3-க்கு குரு நாள் 58, 4-க்கு கேது நாள் 21, 5-க்குப் புதன்நாள் 56, 6-க்கு சுக்கிரன் நாள் 70, 7-க்குச் சனி நாள் 36, 8-க்குச் சந்திரன் நாள் 50, 9க்கு ராகு நாள் 21 ஆக நாள் 360.

இதில் எந்த தசை முதல் தோன்றுகிறதோ அது முதலாக மேற்சொன்ன முறைப்படி வருஷ தசை பார்ப்பது; மகா தசையைப்போல் பலன் கொள்ளவும்.

மாத மகாதசை :—ஜனன நக்ஷத்திர முதல் மாதம் பிறந்த நக்ஷத்திரம் வரை எண்ணிக் கொண்ட தொகையை 7-ல் பெருக்கி 9-ல் கொடுத்த மிச்சம் 1-க்கு சூரிய தசை, 2 க்கு புத தசை, 3-க்கு ராகு தசை, 4-க்கு குரு தசை, 5-க்கு கேது தசை, 6-க்குச் சந்திர தசை, 7-க்குச் சனி தசை 8க்குச் சுக்கிர தசை, 9-க்கு செவ்வாய் தசையாகக் கொள்வதாம். கிரகங்களின் மகா தசை ஒரு 1க்கு நாள் ¼ ஆகக் கொள்ளுவது.

இவற்றின் பலன் :–சூரிய தசை நாள் 1½-க்கு அலைச்சல், கபால நோய். புத தசை நாள் 4¼க்கு லாபம், பந்துதரிசனம், ராகு தசை நாள் 4½க்கு நீச சிநேகம், குரு தசை நாள் 3க்கு போஜன சௌக்யம், தனலாபம், கேது தசை நாள் 1¾க்கு தேக பீடை, சந்திர தசை நாள் 2½க்கு சுக்ல பக்ஷமாயின் தனலாபம், கிருஷ்ண பக்ஷமாயின் தன நஷ்டம், சனி தசை நாள் 4¾க்கு விரோதம், குடும்பக் கலகம், ஆயுத விரணம், சுக்ர தசை நாள் 5க்கு ரத்தினாபரண லாபம், செவ்வாய் தசை நாள் 1¾-க்குப் போஜன அசௌக்கியம், கலகம்.

மாத பலன் :—ஜன்ம நக்ஷத்திரம் முதல் மாதம் பிறந்த நக்ஷத்திரம் வரை எண்ணிக்கொண்டத் தொகையை 7-பெருக்கி 8-கழித்த சேடம் 1க்கு ரோகம், 2க்கு லாபம், 3க்குச் செலவு, 4க்கு அலைச்சல், 5க்குப் போஜன சௌக்யம், 6-க்கு ஐசுவரியம், 7க்குக் கலகம், 8-க்குக் கஷ்டமாம்.

தின பலன் :—ஜன்ம நக்ஷத்திரம் முதல் அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணிக் கொண்ட தொகையுடன் ஞாயிறு முதல் அன்றைய வாரம் வரையிலும், பிரதமை முதல் அன்றைய திதி வரையிலும் கண்ட தொகையைச் சேர்த்து 9-கழித்த மிச்சம் 1-க்கு வியாகூலம். 2-க்கு சுபம். 3-க்கு துர்வார்த்தை. 4-க்கு பந்து. 5-க்கு பெண் போகம். 6-க்குச் சுபம். 7-க்குக்கலகம். 8-க்கு ரோகம். 9-க்கு ஞான வாக்யமாம்.

தனிஷ்டா பஞ்சமி :—(இறந்தால் வீடு மூடவேண்டிய நக்ஷத்திரங்கள்.) அவிட்டம், சதயம, பூரட்டாதி. உத்திரட்டாதி, ரேவதி 6-மாதம், ரோகிணி 4-மாதம், கார்த்திகை, உத்திரம் 3-மாதம், மிருகசீரிஷம், சித்திரை, புனர்பூசம், விசாகம், உத்திராடம் 2-மாதம்.

இதற்கு பரிகாரம் :—வெண்கலக் கிண்ணத்தில் நல்லெண்ணெய் விட்டுத் தானஞ் செய்து. அதற்குக் குறித்த காலம் வரையில் மாலையில் கற்பூர தீபாரத்தி செய்யவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யோகினி நிற்கும் திசை

○ பூர்வபக்ஷம்	● அமரபக்ஷம்	திக்கு	பூமி சுக்கிரன் திக்கு
பிரதமை-ஏகாதசி ...	சஷ்டி ...	கிழக்கு ...	கிழக்கு ...
துதியை-துவாதசி ...	சப்தமி ...	வடக்கு ...	தென்கிழக்கு ...
திருதியை-திரயோதசி ...	அஷ்டமி ...	தென்கிழக்கு ...	தெற்கு ...
சதுர்த்தி-சதுர்த்தசி ...	நவமி ...	தென்மேற்கு ...	தென்மேற்கு ...
பஞ்சமி-பூரணை ...	தசமி ...	தெற்கு ...	மேற்கு ...
சஷ்டி ...	பிரதமை-ஏகாதசி ...	மேற்கு ...	வடமேற்கு ...
சப்தமி ...	துதியை-துவாதசி ...	வடமேற்கு ...	வடக்கு ...
அஷ்டமி ...	திருதியை-திரயோதசி ...	வடகிழக்கு ...	வடகிழக்கு ...
நவமி ...	சதுர்த்தி-சதுர்த்தசி ...	ஆகாசம் ...	ஆகாசம் ...
தசமி ...	பஞ்சமி-அமாவாசை ...	பூமி ...	பூமி ...

சொப்பன பலன்கள்

(பகலில் காணும் சொப்பனத்திற்குப் பலனில்லை)

இரவில் 1-ம் ஜாமத்தில் கண்ட சொப்பனம் ஒரு வருஷத்திலும், 2-ம் ஜாமத்தில் கண்ட சொப்பனம் 3-மாதத்திலும், 3-ம் ஜாமத்தில் கண்ட சொப்பனம் ஒரு மாதத்திலும் அருணோதயத்தில் கண்ட சொப்பனம் 10-தினத்திலும், விடியற்காலையில் கண்ட சொப்பனம் உடனே பலிதமாகும். நல்ல சொப்பனம் கண்டால் மறுபடியும் நித்திரை செய்யலாகாது. கெட்ட சொப்பனம் கண்டால், கடவுளைத் தியானித்துப் பிறகு நித்திரை செய்ய வேண்டும்.

சுப சொப்பனங்கள்:—பசு, எருது, யானை, தேவாலயங்கள், அரண்மனை, மலை, உச்சி, விருக்ஷம் இவைகளில் மேலேறுதல், மாமிச பக்ஷணம், தயிரன்னம் புசித்தல், வெள்ளை வஸ்திரம் தரித்தல், இரத்தினாபரணங்கள் காணல், சந்தனம் பூசி கொள்ளல், வெற்றிலை பாக்கு தரித்தல், கற்பூரம், அகில், வெள்ளை புஷ்பம் இவைகளைக் கண்டால் சொற்ப சம்பத்துண்டாகும். வெண்ணிறப் பாம்பு கடித்தல், தேள் கடித்தல், சமுத்திரம் தாண்டல், நெருப்பில் அகப்படுதல், கட்டுப்படல் இவைகளைக் கண்டால் தன லாபமுண்டு.

பஞ்சாங்க குறிப்பு எழுத்துக்கள். திதிகள் – 15

பிரதமை	பிர	சப்தமி	சப்	திரயோதசி	திர
துதியை	துதி	அஷ்டமி	அஷ்	சதுர்த்தசி	சதி
திருதியை	திரு	நவமி	நவ	பௌர்ணமி	பௌ
சதுர்த்தி	சது	தசமி	தச	அல்லது	
பஞ்சமி	பஞ்	ஏகாதசி	ஏகா	அமாவாசை	அமா
சஷ்டி	சஷ்	த்வாதசி	த்வா	ஆக திதிகள்	15

சுக்ல பக்ஷம் திதி 15 கிருஷ்ண பக்ஷம் திதி-15, ஆகமொத்தம் 30-திதிகள். 29½ நாள் கொண்டது ஒரு சாந்திரமான மாதமாகும்.

நக்ஷத்திரங்கள் – 27

அசுவனி†	அசு	பூசம்†	பூச	சுவாதி†*	சுவா	திருஓணம்†	திஓ
பரணி†	பர	ஆயில்யம்†	ஆயி	விசாகம்	விசா	அவிட்டம்	அவி
கிருத்திகை	கிரு	மகம்†*	மக	அநுஷம்†*	அனு	சதயம்†	சத
ரோகிணி†*	ரோ	பூரம்†	பூர	கேட்டை†	கேட்	பூரட்டாதி	பூட்
மிருகசீரிஷம்*	மிரு	உத்திரம்†*	உத்	மூலம்†*	மூல	உத்திரட்டாதி†*	உட்
திருவாதிரை†	திரு	அஸ்தம்†*	அஸ்	பூராடம்†	பூரா	ரேவதி†*	ரேவ
புனர்பூசம்	புன	சித்திரை	சித்	உத்திராடம்*	உரா	ஆக நக்ஷத்ரங்கள்	27

யோகங்கள்—27

விஷ்கம்பம்	விஷ்	திருதி	திரு	வஜ்ரம்*	வஜ்	சாத்தியம்*	சாத்
ப்ரீதி*	ப்ரீ	சூலம்	சூல	சித்தி*	சித்தி	சுபம்*	சுப
ஆயுஷ்மான்*	ஆயு	கண்டம்	கண்	வ்யதீபாதம்	வ்ய	சுப்பிரம்*	சுப்
சௌபாக்யம்*	சௌ	விருத்தி*	விரு	வரீயான்*	வரீ	பிராம்யம்*	பிரா
சோபனம்*	சோ	துருவம்	துரு	பரிகம்	பரி	ஐந்திரம்*	ஐந்
அதிகண்டம்	அதி	வ்யாகாதம்	வ்யா	சிவம்*	சிவ	வைதிருதி	வை
சுகர்மம்*	சுக	ஹர்ஷணம்*	ஹர்	சித்தம்*	சித்	ஆக யோகங்கள்	27

கரணங்கள்—11 (முக்கியமாக பயிர் தொழிலுக்கு)

பவம்*	பவ	தைதுலம்*	தை	பத்திரை	பத்	நாகவம்	நாக
பாலவம்*	பால	கரசை*	கர	சகுனி	சகு	கிம்ஸ்துக்கினம்	கிம்
கௌலவம்*	கௌ	வணிசை	வணி	சதுஷ்பாதம்	சது	ஆக கரணம்	11

* இவைகள் முறையே, சுப நக்ஷத்திரங்கள், சுப யோகங்கள், சுப கரணங்கள்.

† 18-ம் முழு நட்சத்திரங்கள்-சீமந்தம், காது குத்தல், மனைகோல, வாசக்கால் வைக்க உத்தமம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சுதேச உத்தர அக்ஷாம்சத்திற்குரிய (நிராயன) இராசிமான சங்கியை

உத்தர அக்ஷாம்சம்	மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி	துலாம்	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்	உத்தர அக்ஷாம்சம்
பாகை	நா வி	நா வி	நா வி	நா வி	நா வி	நா வி	நா வி	நா வி	நா வி	நா வி	நா வி	நா வி	பாகை
0	4 54	5 15	5 21	5 02	4 44	4 40	4 52	5 16	5 21	5 03	4 43	4 40	0
1	51	14	22	04	46	42	53	17	21	01	41	38	1
2	49	13	23	05	47	43	55	18	21	5 00	40	36	2
3	48	12	23	07	49	45	57	19	20	4 58	38	34	3
4	46	11	23	09	51	47	59	20	20	57	36	31	4
5	44	10	24	11	53	49	5 01	21	19	55	34	29	5
6	42	09	24	12	55	51	03	22	19	54	32	27	6
7	41	08	24	13	56	52	05	23	19	54	30	25	7
8	39	07	25	14	58	54	07	24	19	53	28	22	8
9	37	06	25	16	5 00	56	09	25	19	51	26	20	9
10	35	06	25	18	02	58	11	25	19	50	24	17	10
11	33	05	26	20	04	5 00	13	26	19	48	21	15	11
12	31	05	26	21	06	02	14	27	19	47	19	13	12
13	29	04	27	22	08	04	16	28	19	46	17	11	13
14	27	03	28	23	10	06	18	29	18	44	15	09	14
15	25	02	28	25	12	08	19	30	18	43	13	07	15
16	23	01	28	27	14	10	21	31	18	41	11	05	16
17	21	5 00	29	29	16	12	23	32	17	39	09	03	17
18	19	4 58	29	31	19	15	26	33	17	37	06	4 00	18
19	17	57	29	33	22	18	28	35	15	35	03	3 57	19
20	15	55	29	35	25	21	31	37	15	33	4 00	53	20
30	3 58	4 44	5 34	5 53	5 48	5 45	5 53	5 49	5 10	4 15	3 37	3 29	30
தக்ஷிண அக்ஷாம்சம்	துலாம்	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்	மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி	தக்ஷிண அக்ஷாம்சம்

சுதேச தக்ஷிண அக்ஷாம்சத்திற்குரிய (நிராயன) இராசிமான சங்கியை

இலக்கினத் தியாச்சியம்				வாரத் தியாச்சியம்		
மேஷம்-முதலில்	1/2 நாழி	துலாம்-நடுவில்	1/2-நாழி	ஞாயிறு 32-நாழி		சனி 14-நாழி
ரிஷபம்-முதலில்	1/2 ,,	விருச்சிகம் கடைசியில்	1/2 ,,	திங்கள் 42 ,,		
மிதுனம்-நடுவில்	1/2 ,,	தனுசு-முதலில்	1/2 ,,	செவ்வாய் 31 ,,		இந்த நாழிகை
கடகம்-கடைசியில்	1/2 ,,	மகரம்-கடைசியில்	1/2 ,,	புதன் 42 ,,		களுக்குமேல் 3¾
சிம்மம்-நடுவில்	1/2 ,,	கும்பம்-நடுவில்	1/2 ,,	வியாழன் 31 ,,		நாழிகை வரை
கன்னி-முதலில்	1/2 ,,	மீனம்-கடைசியில்	1/2 ,,	வெள்ளி 21 ,,		தியாச்சியம்.

*திதித் தியாச்சியம்				*நக்ஷத்திர தியாச்சியம்					
பிரதமை	2/5	நவமி	1/12	அசுவினி	5/6	மகம்	1/2	மூலம்	1/3
துதியை	1/5	தசமி	11/10	பரணி	2/5	பூரம்	1/3	பூராடம்	2/5
திருதியை	11/12	ஏகாதசி	1/60	கிருத்திகை	1/2	உத்திரம்	3/10	உத்திராடம்	1/3
சதுர்த்தி	1/12	துவாதசி	1/4	ரோகிணி	2/3	அஸ்தம்	11/30	திருவோணம்	1/6
பஞ்சமி	9/10	திரயோதசி	13/30	மிருகசீரிஷம்	7/30	சித்திரை	14/15	அவிட்டம்	1/6
சஷ்டி	9/10	சதுர்த்தசி	7/60	திருவாதிரை	7/20	சுவாதி	7/30	சதயம்	3/10
சப்தமி	31/60	பௌர்ணமி	29/60	புனர்பூசம்	1/2	விசாகம்	7/30	பூரட்டாதி	4/15
அஷ்டமி	1/3	அமாவாசை	1/10	பூசம்	1/3	அனுஷம்	1/6	உத்திரட்டாதி	2/5
				ஆயில்யம்	8/15	கேட்டை	7/30	ரேவதி	1/2

*ஆதியந்த நாழிகையில் மேல் சொல்லிய பாகத்திற்கு மேல் 4-நாழிகை வரையில் விஷகடிகம். சுபகாரியங்கள் அப்பொழுது விலக்கவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அங்கீகரிக்கப் பெற்றவை

விவரம்	நட்சத்திரம்	திதி	லக்கினம்	விஷேச விதி
மங்கலியஞ் செய்தல்.	அசு, ரோ, மிரு, புன, பூச, மகம், உத், அஸ், சுவாதி, அநு, திரு, அவி, சத, ரே.	து, தி, ப, சப், தசமி, ஏகா, துவா, திர.	ரி, மி, கட, கன், து, தனு, மிது.	2-ம் இடம் சுத்தம்.
விவாகம்.	1. [ரோ, மி, ம, உ, அஸ், சு, அநு, மூல, உத், திருஓ, சத, உட், ரே.] 2. [அசு, பு, பூச, சித், அவி, சத.]	து, தி, ப, சஷ், சப், தச, ஏகா. துவா, திர	ரி, மி, கட, கன், து, தனு, கும்.	8-6-11ல் பாவர் நன்று 8-ல் குரு பொல்லார். 6-8-ல், புதன், சுக்கிரன் கெடுதி, 2-3-ல் சந்திரன் நன்று. 7-ல் எவருந்தீயர்.
நிஷேகம்.	1. [ரோ, உத், அஸ், சு, அநுஷ, உத், திருஓ, சதய, உட், ரே.] 2. [அசு, மிரு, புன, பூச, சித், அவி.]	து, தி, ப, சஷ், சப், தச, ஏகா, துவா, திர.	1. மே, கட, து, ம. 2. சுப திருஷ்டியுள்ள மற்ற ராசி நன்று.	1-7-8-ம் இடம் சுத்தம், ஜன்ம நட்சத்திரம் ஆகாது.
பும்சவனம்.	அசு, ரோ, மி, புன, பூச, உத், அஸ், சி, சு, அநு, மூ, உ, திரு, அவி, ச. உட், ரோ.	து, தி, ப, சஷ், சப், தச, ஏகா, துவா, திர.	மே, ரி, து, த, ம, கு, மீ.	3-ம் மாதத்தில் செய்தல், 8-ம் இடம் சுத்தம்.
சிமந்தம்.	ரோ, மி, புன, பூச, உத், அஸ், உத்தி, திருவோண, உட், ரேவ.	தி, பஞ், சப், ஏகா, திர.	மே, ரி, மி, கட, கன், து, த, ம, கு, மீ.	8-9-ம் இடம் சுத்தி, ஏறும் பொழுதவசியம்.
தொட்டிலில் குழந்தையை விடுதல்.	ரோ, திருவா, பூச, உ, உத், திருவோ, அவி, சத, உட்.	து, தி, பஞ், ச, தசமி, ஏகா, துவா, திர.	சுபர் பார்த்தலக்னம்.	8-ம் இடம் சுத்தி.
காது குத்தல்.	மிரு, திருவா, புன, பூச, உட், அஸ், சித், உத், திருவோண, அவி, உட், ரேவ.	து, தி, ப, சஷ், சப், துவா, திர.	1. ரி, கட, கன், து, த, மீ 2. மே, மக.	8-ம் இடம் சுத்தி, பகலில் இரண்டு திதி, நட்சத்திரங்கள் சேரும் தினம் கூடாது.
வித்தியாரம்பம்.	அசு, ரோகி, திருஓ, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அநுஷம், திருஓ, அவி, சத, உட், ரேவ.	து, தி, ப, சஷ், சப், தச, ஏகா.	மே, மிது, கட, கன், து, தனு, மக, மீ.	5-வது வயதில் நடத்தல், 4-8ம் இடம் சுத்தி.
உபநயனம்.	அசு, ரோ, மி, புன, பூச, உ, அஸ், சித், சுவா, அநு, உத், திருஓ, உட், ரேவ.	து, தி, ப, சஷ், சப், தச, துவா, திர.	ரி, மி, கட, கன், து, த, மீ	8-ம் இடம் சுத்தம், உத்தராயணத்தில் செய்தல். (A)
வாகனமேற	அசு, ரோ, மி, பு, ம, உ, அஸ், சித், சுவா, அநு, உத், திருஓ, உட், ரே.	சஷ்டி, ஏகா, பௌ.	மி, கட, சி, கன், து, த, மீ	சூரிய உதயத்தில் ஏறல் நன்று.
கிருஷியாரம்பம் உழவு செய்தல்.	ரோ, புன, பூசம், உத், அஸ்தம்; மூலம், உத், உட், ரேவ.	தி, ப, சப், ஏ, திர.	ரி, மி, கட, மக, மீ.	ஆகாச பாதாள யோகினி கூடாது.
எருவிடல்.	திருவா, புனர், பூச, உத், சித், அநு, உத், உட்.	து, திர, பஞ், சஷ், சப், தசமி, ஏ, துவா, திர.	ரி, மி, கட, மக, மீ.	செவ்வாய்க் கிழமை நன்று.
விதை விதைத்தல்.	1. [ரோகி, பூச, மக, உ, அஸ், சு, அநு, மூல, உத், திருஓ, சத, உட், ரேவ.] 2. [அசு, மி, புன, அவி.]	1. தி, ப, சப், ஏ, திர, பௌ, 2. து, சஷ், தச.	1. ரி, கட, சிம், மீ. 2. மிது, து.	8-ம் இடம் சுத்தம், ஆகாச பாதாள யோகினி கூடாது. (B)
கதிரறுத்தல்.	பர, ரோ, திருவா, மகம், அஸ், விசாக, திருஓ, மிரு, பூச, உத், அநு, உத், உட், ரேவ.	து, தி, ப, சஷ், சப், தச, ஏ, து, திர, பௌ.	ரி, கட, சி, விரு, கும்.	ஜென்ம நட்சத்திரம் கூடாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அங்கீகரிக்கப் பெற்றவை—(தொடர்ச்சி)

விவரம்	நட்சத்திரம்	திதி	லக்கினம்	விசேஷ தேதி
தானியம் களஞ்சியத்தில் வைத்தல்.	பர, ரோ, மி, திருவா, மக, உ, அஸ், அநுஷ, உத், திருவோண, உட்.	து,தி,ப,சப், தசமி,ஏ,துவா, திர, பௌ.	ரி,மி, சிம், கன்,வி,தனு, கும், மீன.	சனிக்கிழமை நன்று சுமங்கலியாவது - கன்னிகையாவது வைத்தல்.
தானியம் செலவிட	அசு, ரோ, மி, புன, பூச, மக, உத், அஸ், சித், சுவா, விசா, அநு, மூல, உத், திருஓ, அவி, சத, உட், ரே.	து,தி,ப,சப், தசமி,ஏ,துவா, திர, பௌ.	ரி,மி, சிம், கன்,வி,தனு, கும், மீன.	சனிக்கிழமை நன்று. வெள்ளிக்கிழமை கூடாது.
மாடு முதலானவை வாங்கல், கொடுத்தல்.	அசு, கிரு, ரோ, மிரு, பு, பூச, மக, பூரம், விசா, அநு, மூலம், பூரா, திருஓ, அவி, பூரட், ரேவ.	து,தி,ப,சஷ், சப், தச, ஏகா, துவா, திர.	சிம், தனு, மக.	8-ம் இடம் சுத்தி, மாடு கொடுத்தலுக்குப் புதன் கிழமை வெள்ளிக் கிழமை கூடாது.
பொன் பூணுதல்.	அசு, ரோகி, மிரு, பூசம், அஸ், சித், அநு, ரேவ	ப், சஷ், தச, ஏகா, பௌ.	ரி,மி,கன், தனு, மீன.	சனிக்கிழமை நன்று. இது ஸ்திரீகளுக்கு விசேஷித்தது.
கோடி உடுத்தல்.	அசு, ரோகி, புன, பூச, உ, அஸ், சித், சுவா, வி, அநு, உத், அவி, உட், ரேவ.	து,தி,ப,சப், தசமி,ஏ,துவா, திர, பௌ.	ரி,மி,கன், வி,த,கு,மீ.	8-ம் இடம் சுத்தம்.
கிரக ஆரம்பம்.	ரோ, மிரு, புன, பூச, மக, உ, சுவா, அநு, உத், திருவோண, சத, உட், ரேவ.	து,தி,ப,சப், தசமி,ஏ,துவா, திர.	சிம்,ரி, வி, கும்.	8-12-ம் இடம் சுத்தி.
கிருகப் பிரவேசம்.	ரோகி, மி, புன, பூசம், உ, அஸ், அநு, உத், திருவோண, சதய, உட், ரே.	து,தி,ப,சப், தச, ஏ, திர.	ரி, மி, சிம், கன், து, தனு, கும், மீன.	குரு, சுக்கிர அஸ்தமனமும், வெள்ளி எதிரும் கூடாது. 8-12-ம் இடம் சுத்தம்.
வியாதியஸ்தர் மருந்துண்ணல்.	அசு, ரோ, மி, புன, பூச, உ, அஸ், சித், சுவா, அநு, உத், திருஓ, அவி, சதய, உட், ரேவ	து, தி, பஞ், சப்தமி, ஏகா, துவா, திர.	மே, கட, துலா, மக.	ஞாயிறு நன்று. 8-ம் இடம் சுத்தம்.
வியாதியஸ்தர் குளித்தல்.	அசு, பர, கிரு, மிரு, திரு, பூச, பூரம், அஸ், சித், விசா, அநு, கேட், மூலம், பூரம், திருஓ, அவி, சத, பூரட்.	து,தி,ப,சஷ், சப், தச, ஏகா, துவா, திர.	மே, மி, சி, கன்னி, தனு, மக, மீன.	பகற் காலம் நன்று. செவ்வாய், புதன், வியாழன் நன்று.
பிரயாணம்.	அசு, ரோ, மிரு, புன, பூச, உ, அஸ், அநு, மூலம், உ, திருவோ, அவி, சத, உட், ரேவ.	து,தி,ப,சப், தச, ஏகா, திர.	மேஷ, மீ, கட, கன், து, தனு, மக, மீ.	சூலம், யோகினி கூடாது. புதன், வியாழன், வெள்ளிக்கிழமை நன்று. (C)

(A) ஸாம வேதிகள் செவ்வாயும், ருக் வேதிகள் குருவும், யஜுர் வேதிகள் சுக்கிரனும் அஸ்தமனமும் நீசமுமாய் இருக்கும்போது செய்யக்கூடாது.

(B) நெல்—ஞாயிற்றுக்கிழமை உதயம், எள்—சனி உச்சி, கொள்ளு, வரகு—செவ்வாய் உதயம், கரும்பு நட—அசுவினி, வெற்றிலை நட—ஆயில்யம், மூலம், எள்—அனுஷம், சதயம், மரம்—ரோகணி, கத்திரி முதலானது நட—பரணி, பயிறு—சித்திரை.

(C) சூலையுள்ள திசையில் போகக் கூடாது. அவசியம் போக வேண்டியதானால், வாரசூலை காலத்தில் 78-வது பக்கத்தில் காட்டியுள்ள நாழிகைக்கு மேல் செல்லலாம். யோகினி பின்னும் இடமும் நன்று, முன்னும் வலமும் தீது. அதில் காணாத நட்சத்திரங்களில் கடன் கொடுத்தல், வாங்கல், வியாதியஸ்தர் படுத்தல் ஆகாது.

N. B.—1-முதல் தரம் நன்று. 2-இரண்டாம் தரம் மத்திமம். ஞாயிற்றுக்கிழமை சாஸ்திரங்களில் விலக்கப்பட்டது என்றும், அநுஷ்டானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முக்கிய பட்டணங்களின் அக்ஷாம்சமும் (Latitude) ரேகாம்சமும் (Longitude)

பட்டணங்கள்	N. Lat. வடக்கு அக்ஷாம்சம் பா.	க.	East Longitude கிழக்கு ரேகாம்சம் கோண அலகில் பா.	க.	நேர அலகில் ம. நி. செ	பட்டணங்கள்	N. Lat வடக்கு அக்ஷாம்சம் பா.	க.	East Logitude கிழக்கு ரேகாம்சம் கோண அலகில் பா.	க.	நேர அலகில் ம. நி. செ
அயோத்தி ...	26	51	81	56	5 27 44	சென்னை ...	13	4	80	15	5 21 00
அலஹாபாத் ...	25	28	81	54	5 27 36	சேலம் ...	11	39	78	12	5 12 48
ஆக்ரா ...	27	10	77	59	5 11 56	டில்லி ...	28	39	77	17	5 09 08
ஆற்காடு ...	12	52	79	21	5 17 24	தஞ்சாவூர் ...	10	45	79	7	5 16 28
ஐதராபாத் ...	17	20	78	30	5 14 00	திருச்சிராப்பள்ளி ...	10	50	78	46	5 15 04
கஞ்சம் ...	19	24	85	7	5 40 28	திருநெல்வேலி ...	8	44	77	45	5 11 00
கடப்பை ...	14	28	78	52	5 15 28	திருவனந்தபுரம் ...	8	29	76	59	5 07 56
கண்ணனூர் ...	11	57	75	24	5 01 36	நாகப்பட்டணம் ...	10	46	79	53	5 19 32
கரூர் ...	10	55	78	4	5 12 16	நாக்பூர் ...	21	9	79	9	5 16 36
கர்நூல் ...	15	50	78	5	5 12 20	நீலகிரி ...	11	24	76	44	5 06 56
கல்கத்தா ...	22	33	88	19	5 53 16	நெல்லூர் ...	14	27	80	1	5 20 04
கள்ளிக்கோட்டை ...	11	15	75	49	5 03 16	பம்பாய் ...	18	55	72	54	4 51 36
கன்னியாகுமரி ...	8	4	77	33	5 10 12	பல்லாரி ...	15	9	76	57	5 07 48
காகிநாடா ...	16	57	82	15	5 29 00	பினாங்கு ...	5	25	100	15	6 41 00
காசி ...	25	19	83	3	5 32 12	புதுச்சேரி ...	11	55	79	49	5 19 16
காஞ்சிபுரம் ...	12	50	79	51	5 19 24	பூனா ...	18	31	73	55	4 55 40
காலி ...	6	8	80	2	5 20 08	பெங்களூர் ...	12	58	77	37	5 10 28
குண்டூர் ...	16	18	80	29	5 21 56	மங்களூர் ...	12	52	74	53	4 59 32
குத்தி ...	15	5	77	40	5 10 40	மசூலிப்பட்டணம் ...	16	9	81	12	5 24 48
கும்பகோணம் ...	10	52	79	25	5 17 40	மதுரை ...	9	56	78	7	5 12 28
கூடலூர் ...	11	43	79	49	5 19 16	மைசூர் ...	12	18	76	42	5 06 48
கொச்சி ...	9	58	76	17	5 05 08	யாழ்ப்பாணம் ...	9	40	80	2	5 20 08
கொழும்பு ...	6	56	79	56	5 19 44	ரங்கூன் ...	16	47	96	13	6 24 52
கோயமுத்தூர் ...	11	0	77	0	5 08 00	ராஜமகேந்திரம் ...	17	8	81	49	5 27 16
சிங்கப்பூர் ...	1	17	103	50	6 55 20	ராமேஸ்வரம் ...	9	18	79	25	5 17 40
சித்தூர் ...	13	15	79	6	5 16 24	விசாகப்பட்டிணம் ..	17	41	83	19	5 33 16
சிம்லா ...	31	6	77	13	5 08 52	விஜயநகரம் ...	18	7	83	28	5 33 52
சூரத் ...	21	12	72	52	4 51 28	விஜயவாடா ...	16	30	80	40	5 22 40

குறிப்பு : பா.=பாகை (Degree) ; க.=கலை (Minute of arc) ; ம.=மணி (Hour) ; நி.=நிமிஷம் (Minute of time).

15 பாகைக்கு 1 மணி (அ) 15 கலைக்கு 1 நிமிஷம் (அ) 1 கலைக்கு 4 செகண்டு வீதம் மாற்ற ரேகாம்சம் நேர அலகில் கிடைக்கும். இக் காலத்தில் பொது உபயோகத்திற்காக ஒவ்வொரு தேசத்திலும் ஸ்டாண்டர்ட் நேரம் (Standard Time) ஒன்றை உபயோகித்து வருகிறார்கள். ஒவ்வொரு கடிகாரமும் இந்த ஸ்டாண்டர்ட் நேரத்தைத்தான் காட்டுகின்றது. இந்திய ஸ்டாண்டர்ட் மணி லண்டன் நேரத்தைவிட $5\frac{1}{2}$ மணி அதிகம்.

68-69ம் பக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் நேரங்கள் "சுதேச காலங்கள்" (Local Mean Times). இந்த சுதேச நேரம் சூரிய உதயாஸ்தமனங்கள் கண்டு பிடிக்கவும், நக்ஷத்திர ஹோரை (Sidereal Time) கணிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

சுதேச நேரத்தையும், இந்திய ஸ்டாண்டர்ட் நேரத்தையும் இணைக்கும் சூத்திரம் :

ஒரு ஊரின் கிழக்கு ரேகாம்சம் நேர அலகில் L மணி (மேலே 4வது பத்தி), அவ்வூரில் ஒரு க்ஷணத்தில் I. S. T. நேரம் H மணி, சுதேச நேரம் M மணி ஆனால்

(அ) $H = M + 5\frac{1}{2} - L$, (அ) $L = 5\frac{1}{2} + M - H$, (அ) $L + H - M = 5\frac{1}{2}$.

உதாரணம் 62-ம் பக்கம் பார்க்கவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஊர்த்துவமுக நக்ஷத்திரம் :—
மேனோக்கும் நாள்

ரோகணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்ரட்டாதி இவைகளில் உப்பரிகை, கொடி மரம், மதில், வாசல்படி, வீதி, யானை, குதிரைக் கொட்டகை, பந்தல், பட்டாபிஷேகம் இவை ஆரம்பிக்கச் சுபம்.

அதோமுக நக்ஷத்திரம் :—
கீழ்நோக்கும் நாள்

பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி இவைகளில் குளம், கிணறு, புதையல், களஞ்சியம், வேலி, சொக்கட்டான், கிரகப்பிரவேசம், கணிதம் ஆரம்பிக்க உத்தமம்.

திரியக்முக நக்ஷத்திரம் :—
சமநோக்கு நாள்

அசுவனி, மிருகசீரிஷம் புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி இவைகளில் யானை, குதிரை, ஒட்டகம், எருமை, கழுதை, ரிஷபம் முதலிய நாற்கால் பிராணிகள் கிரயம் வாங்குதல், மேய்தல், ஏற்றம், உழவு, கால்வாய், வாசற்கால், தூண் முதலிய நாட்டுதல் இவைகள் ஆரம்பிக்க உத்தமம்.

கூடா நாள் ஆகாத—நக்ஷத்திரங்கள்

ஆதிரை பரணி கார்த்திகை
ஆயில்யம் மூப்பூரங் கேட்டை
நீதுரு விசாகஞ் சோதி
சித்திரை மகமீ ராறும்
மாதனங் கொண்டார் தாரார்
வழிநடைப் பட்டார் மீளார்
பாய்தனிற் படுத்தார் தேருர்
பாம்பின் வாய்த்தேரை தானே

பரணி, கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி ஆகிய 12 நக்ஷத்ரங்களிலும் கடன் வாங்கிக்கொண்டவர் திருப்பித் தருவதும், பிரயாணம் போனவர் திரும்புவதும், நோயாய்ப்படுத்தவர் தேறுவதும் அரிதாம்; பாம்பின் வாயில் அகப்பட்டுக்கொண்ட தேரை போலாம்.

ஆந்தை கூவுதல் சகுனம் :—1-குரல் கூவுமாகில்-உற்றதோர் சாவு நேரும். 2-குரல் கூவுமாகில்-எண்ணிய கருமம் நன்று. 3-குரல் கூவுமாகில்-மோக மங்கை சேர்வாள். 4-குரல் கூவுமாகில்-நாழிகையிற் கலகம் நேரும். 5-குரல் கூவுமாகில்-அங்கொரு பயணமாகும். 6-குரல் கூவுமாகில்-அடுத்தவர் வரவு நேரும். 7-குரல் கூவுமாகில்-இருந்ததோர் பொருளும் போகும். 8-குரல் கூவுமாகில்-திட்டென சாவு நேரும். 9-ம், 10-மாகில் உத்தமம் மிகவும் நன்றே

கோட்சாரம் :— சூரியன்:— 1-வியாதி, 2-வியாகூலம், 3-நன்மை, 4-சத்துரு பயம், 5-ரோகம் 6-திரவிய லாபம், 7-ஸ்தான சலனம், 8-சரீர பீடை, 9-பயம், 10-தன லாபம், 11-நன்மை விருத்தி, 12-தன விரயம்.

சந்திரன் :—1-தேக சௌக்கியம், 2-தன ஹானி, 3-திரவிய லாபம், 4-ரோக பயம், 5-காரிய விகல்பம், 6-சந்தோஷம், 7-சௌக்கிய விருத்தி, 8-ரோக விருத்தி, 9-காரிய தாமதம், 10-நிலைபேறு, 11-இஷ்டார்த்த சித்தி, 12-தன விரயம்.

செவ்வாய், சனி, ராகு, கேது :— 1-புத்திக் குறைவு, 2-வியாதி, 3-திரவிய லாபம், 4-விரோதம், சுரம், 5-பலசேதம், 6-லக்ஷ்மீ கரம், 7-சிறைபயம், கலகம், 8-மரணபயம், கஷ்டம், 9-காரிய நஷ்டம், 10-பயம், பணச்செலவு, 11-திரவிய லாபம், 12-பிணி, சத்துரு, செலவு.

புதன் :—1-பிரயாணம், 2-நற்குணம், 3-புத்திக் குறைவு, 4-புத்தி விருத்தி, சரீரபீடை, 5-அபகீர்த்தி, 6-திரவிய லாபம், 7-சோகம், 8-அநுகூலம், 9-மறதி, 10-லக்ஷ்மீகரம், 11-சந்தோஷம், 12-பலநஷ்டம்.

குரு அல்லது வியாழன் :—1-மரண பயம், பொருட்சேதம், 2-பொருள் வரவு, 3-வியாதி, கஷ்டம், 4-சிநேக விரோதம், 5-திரவிய லாபம், 6-துயரம், 7-ஸ்திரீ சங்கமம், சுகம், 8-மரண வியாகூலம், 9-வஸ்திரம், சம்பத்து, 10-இடப் பெயர்ச்சி, பிரயாணம், 11-பொன், வஸ்திரம், 12-திரவிய நாசம், வியாதி.

சுக்கிரன்:—1-பொருட்பேறு, 2-லக்ஷ்மீகரம், 3-சௌக்கியம், 4-பந்து கூட்டம், 5-திரவிய லாபம், 6-நிலைப்பிரிவு, 7-வியாதி, 8-பிரியம், 9-திரவியம், தருமம், 10-பொருட்சேதம், கலகம், 11-சுகபோஜனம், 12-சுபம், லாபம்.

கலப்பைச் சக்கரம்

சூரியனுள்ள நக்ஷத்திர முதல் அன்றைய நக்ஷத்திரம் வரையில் எண்ணின தொகை 8, 9, 10, 12, 13; 14, 16, 17, 18, 20, 22 ஆனுலுத்தமம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தமிழ் வருஷங்கள் - 60

பிரபவ	ஈஸ்வர	சர்வசித்து	ஹேவிளம்பி	பிலவங்க	பிங்கள
விபவ	வெகுதான்ய	சர்வதாரி	விளம்பி	கீலக	காளயுக்தி
சுக்கில	பிரமாதி	விரோதி	விகாரி	சௌமிய	சித்தார்த்தி
பிரமோதூத	விக்கிரம	விக்ருதி	சார்வரி	சாதாரண	ரௌத்திரி
பிரஜோற்பத்தி	விஷு	கர	பிலவ	விரோதிகிருது	துன்மதி
ஆங்கீரஸ	சித்திரபானு	நந்தன	சுபகிருது	பரிதாபி	துந்துபி
ஸ்ரீமுக	சுபானு	விஜய	சோபகிருது	பிரமாதீச	ருத்ரோத்காரி
பவ	தாரண	ஜய	குரோதி	ஆனந்த	ரக்தாக்ஷி
யுவ	பார்த்திப	மன்மத	விசுவாவசு	இராக்ஷஸ	குரோதன
தாது	விய	துன்முகி	பராபவ	நள	அக்ஷய

நாம நட்சத்திரங்கள்

நக்ஷத்திரம்	நக்ஷத்திர நாம எழுத்துக்கள்	தொடர் எழுத்து	கணம்	மிருகம்	விருக்ஷம்	பக்ஷி
அசுவனி	சு-சே-சோ-ல	செ-சை	தேவம்	ஆண் குதிரை	*எட்டி	இராசாளி
பரணி	லி-லு-லே-லோ	செ-சொ	மானுஷ	ஆண் யானை	*நெல்லி	காகம்
கிருத்திகை	அ-இ-உ-எ	ஆ-ஈ	ராக்ஷஸ	பெண் ஆடு	அத்தி	மயில்
ரோகணி	ஒ-வ-வி-வு	வா-வீ	மானுஷ	ஆண் நாகம்	நாவல்	ஆந்தை
மிருகசீரிஷ	வே-வோ-கா-கி	வை-வௌ	தேவம்	பெண் சாரை	*கருங்கா	கோழி
திருவாதிரை	கு-க-ங-ச	கூ	மானுஷ	ஆண் நாய்	*செங்கா	அன்றி
புனர்பூசம்	கே-கோ-ஹ-ஹி	கெ-கை	தேவம்	பெண் பூனை	*மூங்கில்	அன்னம்
பூசம்	ஹு-ஹே-ஹோ-ட	கொ-கௌ	தேவம்	ஆண் ஆடு	அரசு	நீர் காகம்
ஆயில்யம்	டி-டு-டெ-டோ	மெ-மை	ராக்ஷஸ	ஆண் பூனை	புன்னை	சிச்சிலி
மகம்	ம-மி-மு-மே	மா-மீ-மூ	ராக்ஷஸ	ஆண் எலி	ஆல்	ஆண் கழுகு
பூரம்	மோ-ட-டி-டு	மோ-மௌ	மானுஷ	பெண் எலி	பலா	பெண் கழுகு
உத்திரம்	டே-டோ-ப-பி	பா-பீ	மானுஷ	எருது	அலரி	கிளுவை
அஸ்தம்	பூ-ஷ-ண-ட	பூ	தேவம்	பெண் எருமை	அத்தி	பருந்து
சித்திரை	பே-போ-ர-ரி	பை-பௌ	ராக்ஷஸ	ஆண் புலி	*வில்வம்	மரங்கு
சுவாதி	ரு-ரே-ரோ-த	த	தேவம்	ஆண் எருமை	*மருதம்	தேநீ
விசாகம்	தி-து-தே-தோ	தூ-தை	ராக்ஷஸ	பெண் புலி	*விளா	செங்குருவி
அநுஷம்	ந-நி-நு-நே	நா-நீ-நூ	தேவம்	பெண் மான்	*மகிழ்	வானம்பா
கேட்டை	நோ-ய-யி-யு	நே-நை	ராக்ஷஸ	ஆண் மான்	பராய்	சக்கரவாள
மூலம்	யே-யோ-ப-பி	பு-பூ	ராக்ஷஸ	பெண் நாய்	மரா	செம்பருந்து
பூராடம்	பூ-த-ப-ட	ஊ-எ-ஏ	மானுஷ	ஆண் குரங்கு	வஞ்சி	கௌதாரி
உத்திராடம்	பே-போ-ஜ-ஜி	ஓ-ஓ-ஔ	மானுஷ	மலட்டுப் பசு	பலா	வலியன்
திருவோண	ஜு-ஜே-ஜோ-கா	கீ-கா-கி-கீ	தேவம்	பெண் குரங்கு	எருக்கு	நாரை
அவிட்டம்	க-கீ-கு-கெ	ஞு-ஞா-ஞீ	ராக்ஷஸ	பெண் சிங்கம்	*வன்னி	பொன்வ
சதயம்	கோ-ஸ-ஸி-ஸு	தோ-தௌ	ராக்ஷஸ	பெண் குதிரை	*கடம்பு	அண்டங்
பூரட்டாதி	ஸ-ஸோ-த-தீ	நோ-நௌ	மானுஷ	ஆண் சிங்கம்	தேமா	உள்ளான்
உத்ரட்டாதி	து-ஸ்ரீ-ச-ய	யா	மானுஷ	பசு	*வேம்பு	கோட்டா
ரேவதி	தே-தோ-ச-சி	சா-சீ	தேவம்	பெண் யானை	இலுப்பை	வல்லூறு

* பால் இல்லாத விருக்ஷங்கள்

வார சூலை, சூலை பரிகாரம்

வாரம்	வார சூலை	நாழிகை	சூலை பரிகாரம்
ஞாயிறு	மேற்கு, வடமேற்கு ...	12	வெல்லம்
திங்கள்	கிழக்கு, தென்மேற்கு ...	8	தயிர்
செவ்வாய்	வடக்கு, வடமேற்கு ...	12	பால்
புதன்	வடக்கு, வடகிழக்கு ...	16	பால்
வியாழன்	தெற்கு, தென்கிழக்கு ...	20	தைலம்
வெள்ளி	மேற்கு, தென்மேற்கு ...	12	வெல்லம்
சனி	கிழக்கு, தென்கிழக்கு ...	8	தயிர்

மேற்குறித்த நாழிகை வரையும் சூல தோஷமாம். அவசியமாய்ப் பிரயாணஞ் செய்ய வேண்டுமானால் மேற்கண்ட நாழிகை மேல் அதனருகில் கொடுத்திருக்கும் சூல பரிகாரவஸ்து அல்லது அது கலந்த ஆகாரம் உட்கொண்டபின் பிரயாணம் செய்யலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விவாகப் பொருத்தங்கள்

1. நக்ஷத்திரப் பொருத்தம் அல்லது தினப் பொருத்தம்:—பெண்ணினுடைய நாள் முதல் புருஷனுடைய நாள் வரையில் எண்ணும்போது 2-4-6-8-9-11-13-15-18-20-24-26ம் நக்ஷத்திரங்கள் உத்தமம். 12வது நக்ஷத்திரத்தில் 1ம் பாதமும், 14ம் நக்ஷத்திரத்தில் 4ம் பாதமும், 16ம் நக்ஷத்திரத்தில் 3ம் பாதமும் நீக்கி நின்ற மற்ற பாதங்கள் மத்திமம். இதில் சொல்லப் படாதவையும் அஷ்டம ராசி நக்ஷத்திரங்களும் பொருந்தா.

1-A. ஏக நக்ஷத்ரப் பொருத்தம் அல்லது ஏக தினப் பொருத்தம்:—ரோகணி, திருவாதிரை, பூசம், மகம், அஸ்தம், திருஓணம் இவை 6ம் ஸ்திரீ புருஷர்களுக்கு ஒரே நக்ஷத்திரமானல் உத்தமம். அசுவனி, கிருத்திகை, மிருகசீரிஷம், புனர்பூசம், உத்திரம், சித்திரை, அனுஷம், உத்திராடம் இவை 8ம் மத்திமம். மற்றவை பொருந்தா. ஸ்திரீ புருஷர்களுக்கு ஒரே ராசியானல் புருஷன் நக்ஷத்திரம் முந்தினதும், ஒரே நக்ஷத்திரமானல் பாதம் முந்தினதும் சுபம். மற்றவை பொருந்தா.

2. கணப் பொருத்தம்:—ஸ்திரீ புருஷர்களுக்கு ஒரே கணமானலும், ஸ்திரீ மனுஷ கணமும், புருஷன் தேவ கணமுமானலும் உத்தமம். ஸ்திரீ தேவகணமும் புருஷன் மனுஷ கணமும், ஸ்திரீ தேவ கணமும் புருஷன் ராக்ஷச காணமுமானலும் மத்திமம். ஸ்திரீ ராக்ஷச கணமும் புருஷன் தேவ கணமும், ஸ்திரி மனுஷ கணமும் புருஷன் ராக்ஷச கணமும், ஸ்திரீ ராக்ஷச கணமும் புருஷன் மனுஷ கணமுமானலும் பொருந்தா, இதன் பலன்:-கிரீடானுகூலம், சோபனகரம்.

3. மகேந்திரப் பொருத்தம்:—பெண் நாள் முதல் புருஷன் நாள்வரை எண்ணும்போது 1-4-7-10-13-16-19-22-25 ஆனல் உத்தமம். இதன் பலன்:- புத்திர விருத்தி.

4. ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்:— பெண் நாள் முதலாக எண்ணும்போது புருஷன் நாள் 13க்கு மேலானல் உத்தமம், சிலர் 7க்குமேல் மத்திமம் என்பர். இதன் பலன்:—இந்தப் பொருத்தம் இரா விட்டால் ஸ்திரீக்குக் கண்டம்.

5. யோனிப் பொருத்தம்:— யானைக்கு சிங்கமும் மனுஷனும், குதிரைக்கு பசுவும் எருமையும், பசு, எருமைக் கடா, மான், நாய் இவைகளுக்கு புலியும், குரங்குக்கு ஆடும், எலிக்குப் பூனையும் பாம்பும், பாம்புக்குக் கீரியும் ஆடும், பூனைக்கு நாயும் புலியும் பகையாம், மானுக்கும் பசுவும், ஆட்டுக்கு குதிரையும், நாய்க்கு மனுஷரும் நட்பாம். இவை அல்லாதவை சமம். ஸ்திரீ புருஷர்களுக்குப் பகையில்லாமலிருந்து புருஷனுக்கு ஆண் யோனியும் பெண்ணுக்கு பெண் யோனியுமாகில் உத்தமம். இருவருக்கும் ஆண் யோனியாகில் மத்திமம். புருஷனுக்குப் பெண் யோனியும் பெண்ணுக்கு ஆண் யோனியாகிலும், இருவருக்கும் சத்துரு யோனியாகிலும் பொருந்தா. இதன் பலன்:- அன்யோன்யவசியம்.

6. ராசிப் பொருத்தம்:— பெண்ணும் புருஷனும் ஒரு ராசியாயினும் பெண் ராசிக்குப் புருஷன் ராசி 6க்கு மேற்படினும் உத்தமம், பெண் ராசிக்குப் புருஷன் ராசி 3ம், 4ம், ராசியாகில் மத்திமம். 2ம், 5ம், 6ம், ராசியாகில் அதமம். 8ம் ராசியாகிற் கூடாது. இதன் பலன்:- வம்ச விருத்தி.

7. ராசி அதிபதிப் பொருத்தம்:- ஸ்திரீ புருஷ ராசி அதிபதிகள் மித்திராளானலும் சம மித்திராளானலும் உத்தமம். சத்துரு மித்திராளானல் மத்திமம். சம சத்துருக்களானலும் பொருந்தா. இதன் பலன்:— சந்தான விருத்தி.

கிரகம்	நட்பு	சமம்	பகை
சூரியனுக்கு ...	சந், அங், குரு ...	புதன் ...	சு, சனி, ரா, கேது
சந்திரனுக்கு ...	சூரியன், புதன் ...	அ, கு, சு, சனி...	ராகு, கேது
அங்காரனுக்கு	சூரி, சந், குரு ...	சுக்கிரன், சனி...	புத, ரா, கேது
புதனுக்கு ...	சூரியன், சுக் ...	அங், குரு, சனி, ராகு, கேது ...	சந்திரன்
குருவுக்கு ...	சூரி, சந், அங் ...	சனி, ரா, கே ...	புதன், சுக்கிரன்
சுக்கிரனுக்கு ...	பு, சனி, ரா, கேது	அங்காரக, குரு	சூரியன், சந்திர
சனிக்கு ...	பு, சுக், ரா, கேது	குரு ...	சூரி, சந், அங்
இராகுக்கு, கேதுக்கு	சனி, சுக்கிரன் ...	புதன், குரு ...	சூரி, சந், அங்

8. வசியப் பொருத்தம்:— மேஷத்துக்குச் சிங்கமும் விருச்சிகமும், ரிஷபத்துக்குக் கர்கடகமும் துலாமும், மிதுனத்துக்குக் கன்னியும், கர்கடகத்திற்கு விருச்சிகமும் தனுசும், சிங்கத்துக்கு மகரமும், கன்னிக்கு ரிஷபமும் மீனமும், துலாத்துக்கு மகரமும், விருச்சிகத்துக்குக் கர்கடகமும் கன்னியும், தனுசுக்கு மீனமும், மகரத்துக்குக் கும்பமும், கும்பத்துக்கு மீனமும், மீனத்துக்கு மகரமும் வசியமாம். ஸ்திரீ ராசிக்குப் புருஷ ராசி வசியமானல் உத்தமம். புருஷ ராசிக்கு ஸ்திரீ ராசி வசியமானல் மத்திமம். வசியமில்லாவிடிற் பொருந்தாது. இதன் பலன்:— வசியமாய் இருந்து வாழ்தல்.

9. ரஜ்ஜுப் பொருத்தம்:-மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆகிய இம் மூன்றும் சிரோரஜ்ஜு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ரோகணி, திருவா, அஸ்தம், சுவாதி, திருவோணம், சதயம் ஆகிய இவ்வாறும் கண்டரச்சு; கார்த்திகை, புனர்பூசம், உத்திரம், விசாகம், உத்திராடம், பூரட்டாதி ஆகிய இவ்வாறும் உதரரச்சு; பரணி, பூசம், பூரம், அநுஷம், பூராடம், உத்திரட்டாதி ஆகிய இவ்வாறு தொடை ரச்சு; அசுவனி, ஆயில்யம், மகம், கேட்டை, மூலம், ரேவதி ஆகிய இவ்வாறும் பாத ரச்சு; ஸ்திரீ புருஷர்களுடைய நக்ஷத்திரங்கள் ஒரே ரச்சுவிலிருந்தால் பொருந்தாது. அவைகள் சிரசு ரச்சானால் புருஷன் மரணம்; கழுத்து ரச்சானால் பெண் மரணம்; உதர ரச்சானால் புத்திர தோஷம்; தொடை ரச்சானால் திரவிய நாசம்; பாத ரச்சானால் பிரயாணத்தால் தீங்குண்டாகும். இதன் பலன்:—நீர்க்க சுமங்கலியாயிருத்தல்.

10. வேதைப் பொருத்தம் :—அசுவனிக்கு - கேட்டை, பரணிக்கு - அநுஷம், கார்த்திகைக்கு - விசாகம், ரோகணிக்கு-சுவாதி, திருவாதிரைக்கு-திருவோணம், புனர்பூசத்திற்கு-உத்திராடம், பூசத்திற்கு-பூராடம், ஆயில்யத்திற்கு-மூலம், மகரத்திற்கு-ரேவதி, பூரத்திற்கு-உத்திரட்டாதி, உத்திரத்திற்கு - பூரட்டாதி, அஸ்தத்திற்கு-சதயம் ஒன்றுக்கொன்று வேதையாம். மிருகசீரிஷம் - சித்திரை - அவிட்டம் இவை ஒன்றுக்கொன்று பரஸ்பர வேதையாம். வேதை உண்டானால் பொருந்தாது. பொருந்துவன சுபம்.

பொருத்தங்கள் நிர்ணயம் :— இப் பத்து பொருத்தங்களில் தினம், கணம், யோனி, ராசி, ரச்சு இவ்வைந்தும் முக்கியமானவை. ரச்சு தட்டினால் ஷ்டி விவாகம் செய்யக்கூடாது. மேற்கண்ட தசபொருத்தங்களில் 5க்கு மேற்பட்ட பொருத்தங்கள் இருந்தால் சுபம்; 5க்கு குறைந்திருந்தால் நன்றாய் ஆலோசித்து சகுனம் பார்த்துச் செய்யலாம். பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஜாதகமிராவிட்டால் நாமநட்சத்திரத்திற்குப் பொருத்தம் பார்க்கவும். மிருகசீரிஷம், மகம், சுவாதி, அநுஷம் இந்நான்கும் பெண் நக்ஷத்திரம் அல்லது பிள்ளை நட்சத்திரமாயிருந்தால் பொருத்தம் பாராமல் விவாகம் செய்யலாம். காந்தர்வம், கர்ப்பநிச்சிதம், சதன நிச்சிதம், குரு தெய்வ நியமனம் என்கிற கன்னிகாதானத்திற்கு எவ்வித பொருத்தமும் பாராமலே விவாகம் செய்யலாம்.

இருவர் ஜாதக ரீதியாகவும் பொருத்தம் பார்ப்பது மிக அவசியம்.

பெண் நக்ஷத்திரம் மூலமாயின் மாமனுருக்கும், ஆயில்யமானால் மாமியாருக்கும், கேட்டையானால் மூத்த மைத்துனருக்கும், விசாகமானால் இளைய மைத்துனருக்கும் ஆகாது. புருஷ நக்ஷத்திரத்திற்கு ஷ்டி தோஷமில்லை.

செவ்வாய் தோஷம் அல்லது அங்காரக தோஷம் :—ஜென்ம லக்கனத்திற்கு 2-4-7-8 12ம் இடங்களில் செவ்வாயிருந்தால் செவ்வாய் தோஷம், சிலர் செவ்வாய், மேஷம், கடகம், விருச்சிகம், மகரம் இந்த ராசிகளிலிருந்தாலும், குரு, சனி, ராகு, கேது இவர்களுடன் சேர்ந்தாலும், இவர்கள் பார்க்கப்பட்டாலும் செவ்வாய் தோஷத்திற்கு பரிகாரம் என்பர். இன்னுஞ் சிலர் லக்கனத்திற்குப் பார்ப்பது போல சந்திர-சுக்கர லக்கனத்திற்குப் பார்ப்பர். ஸ்திரீ புருஷர் இருவருக்கும் ஷ்டி தோஷம் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், அல்லது இருவருக்கும் தோஷமிருந்து பரிகாரமிருந்தாலும் விவாகம் செய்யலாம்.

பஞ்சகம் பார்க்க:-பஞ்சகம் பார்க்க வேண்டிய காலம் வரையில் ஞாயிறு முதலாக அன்றைய வாரம் வரையும், பிரதமை முதலாக அன்றைய திதி வரையும், அசுவினி முதல் அன்றைய நக்ஷத்திரம் வரையும், மேஷம் முதல் அப்போதைய லக்ன வரையும், எண்ணிக் கண்ட தொகையுடன் லக்ன துருவத்தைக் கூட்டி ஒன்பதில் வகுத்த மிச்சம் 3-5-7-9 உத்தமம். மற்ற 1-2-4-6-8 நீக்கப்படும். 1 மிருத்து பஞ்சகம்-ரத்தின தானம். 2 அக்கினி பஞ்சகம்-சந்தன குழம்பு தானம். 4 ராஜ பஞ்சகம்-எலுமிச்சபழ தானம். 6 சோர பஞ்சகம்-தீப தானம். 8 ரோக பஞ்சகம் - தானிய தானம். இவ்வாறு கண்டு கொள்க.

அவசியமாய் பார்க்க வேண்டும் பொழுது மத்தியானத்தில் ராஜ பஞ்சகமும், அக்கினி பஞ்சகமும் ராத்திரியில், சோர பஞ்சகமும் ரோக பஞ்சகமும் எல்லாக் கர்மங்களிலும் மிருத்யு பஞ்சகமும் ஆகா, இன்னுமொரு பக்ஷம் உபநயனத்தில் ரோக பஞ்சகமும், விவாகத்தில் ராஜ பஞ்சகமும், எல்லாக் கர்மங்களிலும் மிருத்யு பஞ்சகமும் நீக்கப்படும்.

லக்கின துருவம் :— மேஷத்திற்கு-5, ரிஷபத்திற்கு-7, மகரத்திற்கு-2, கும்பத்திற்கு-4, மீனத்திற்கு-6, துருவமாகும். மற்ற ராசிகட்குத் துருவமில்லை. சிலர் பஞ்சக அங்கங்களில் ஒன்றாகிய துருவ அங்கத்தை விட்டு விடுகிறார்கள்.

இப் பஞ்சாங்கத்தில் உள்ள விவாக சுப முகூர்த்தங்கட்குப் பஞ்சகத்தில் துருவம் அநுசரித்திருக்கிறது.

முகூர்த்த விதானம் :—சுப முகூர்த்தங்களுக்குப் பொருந்தாத (அ) நக்ஷத்திரங்கள் :— ஜன்ம நட்சத்திரமும், 3, 5, 7, 10, 14, 19, 22, 27-ம் நக்ஷத்திரங்களும், சந்திர லக்னத்திற்கு 8-ம் ராசிக்குரிய 2¼ நக்ஷத்திரங்களும் சுப கருமங்களுக்கு விலக்கப்படும். பெண்ணினுடைய 1, 10, 19ம் நக்ஷத்திரங்களிலும் புருஷனுடைய 10ம் நக்ஷத்திரத்திலும் விவாகம் செய்யலாம். (ா) **திதிகள்** :— சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி, சதுர்த்தசி. (சி) **யோகங்கள்**:- மரண யோகம், உற்பாத யோகம், பிரபலாரிஷ்டம். (டி) தனியநாள், கரிநாள். (இ)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இராகு காலம், எமகண்ட காலம், (எப்) செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை சாஸ்திரங்களில் விலக்கப்பட்டது என்றும், அநுஷ்டானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது என்றும் தெரிய வருகிறது.

தாரா பலன்:—ஜன்ம நக்ஷத்திர முதல் அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணிக்கொண்டு வந்த தொகையை ஒன்பதிற் கழித்து நின்ற மிச்சத்தில் 2-4-6-8 உத்தமம்.

1-வது ஜன்மம்-கிலேசமுண்டாகும். 2-வது சம்பத்து உண்டாகும். 3-வது விபத்து. 4-வது க்ஷேமம். 5-வது பிரத்தியக்கு-காரிய நாசம். 6-வது சாதகம்-தெய்வாநுகூலம். 7-வது வதை. 8-வது மைத்திரம்-சுபங்களுண்டு. 9-வது பரம மைத்திரம்-அதிக சுகமுண்டு. சிலர் 9-வது தாரை அசுப மென்பர். சிலர் முதற் பரியாயத்தில் ஜன்ம தாரையும், இரண்டாம் பரியாயத்தில் விபத்து தாரையும், மூன்றும் பரியாயத்தில் பிரத்தியக்கு தாரையும், மூன்று பரியாயத்திலும் வதைத்தாரையும், 22-வது நக்ஷத்திரத்தின் 4-வது பாதமும் ஆகா வென்பர், மற்றவை கூடுமென்பர்.

சந்திர பலன்:—ஜன்ம ராசி முதல் அன்றைய தினம் சந்திரன் இருக்கிற ராசி வரையும் எண்ணிக்கொண்டு வந்த தொகையில் 1-க்கு தேக சௌக்கியம், 2-க்கு தனஹானி, 3-க்கு திரவிய லாபம், 4-க்கு ரோக பயம், 5-க்கு காரிய விக்கினம், 6-க்கு சத்துரு நாசம், 7-க்கு சௌக்கிய விருத்தி, 8-க்கு ரோக விருத்தி, 9 க்கு காரிய தாமதம், 10-க்கு உத்யோக விருத்தி, 11-க்கு இஷ்டார்த்த சித்தி, 12-க்கு தன விரயம். சிலர் சுக்ல பக்ஷத்தில் 2-5-9 உத்தம மென்றும் கிருஷ்ண பக்ஷத்தில் 8-12 உத்தமமென்றும் சொல்வார்கள்.

ருது வாரம்:—ஞாயிறு-புத்திரரில்லை, திங்கள்-பதிவிரதை, செவ்வாய்-விதவை, புதன்-புத்திரருண்டாம், தனமுண்டாம், வியாழன்-தனமுண்டாம், வெள்ளி-சுகமுடையாள், சனி-தரித்திரியாம்.

ருது நக்ஷத்திரம்:—அசுவினி-விதவை, பரணி-புத்திரவதி, கிருத்திகை-மலடி, ரோகிணி-நன்மையுடையவள், மிருகசீரிஷம்-புருஷர்க்கினியவள், திருவாதிரை-வெறுப்புள்ளவள், புனர்பூசம்-சுகமுடையவள், பூசம்-சீருடையவள், ஆயில்யம்-வயிறழிவு, மகம்-பர்த்தாவுக்கு நல்லவள், பூரம்-மலடி, உத்திரம்-பிரயோஜனவதி, அஸ்தம்-நல்லவள், சித்திரை-அறிவுள்ளவள், சுவாதி-குடும்பி, விசாகம்-அமங்கலி, அநுஷம்-ரோகி, கேட்டை-பரஸ்திரீ, மூலம்-பேறுடையவள், பூராடம்-அடிமை தேடும், உத்திராடம்-தர்மிஷ்டி, திருவோணம்-பாக்கியவதி, அவிட்டம்-பொருள் உடையவள், சதயம்-பொருளழிவு, பூரட்டாதி-மலடி, உத்திரட்டாதி-தரித்திரி, ரேவதி-ரோகி.

ருது திதி:—பிரதமை-கன்னி, துதியை-அழகு, திரிதியை-இன்பம் உடையவள், சதுர்த்தி-சத்துரு உண்டு, பஞ்சமி-புத்திரர் உண்டு, சஷ்டி-ஆசாரம் உடையவள், சப்தமி-புத்திரர் உண்டு, அஷ்டமி-பெற்று இழப்பாள், நவமி-துக்கி, தசமி-தர்மிஷ்டி, ஏகாதசி-துக்கி, துவாதசி-பலம் உடையவள், திரயோதசி-கோபி, சதுர்த்தசி-சோரம் போவாள், அமாவாசை, பௌர்ணமி-பாட்டாளி.

ருது லக்கின இடம்:— மேஷம், சிம்மம்-வீட்டிற்குப் புறத்தில், ரிஷபம்-பசுத் தொழுவத்தில், துலாம், கன்னி-நால்வருக்கு நடுவில், விருச்சிகம், மிதுனம்-துயில் அவிழ்த்து உடுக்கையில், தநுசு, கும்பம்-வீட்டிற்குள்ளே, கடகம், மகரம், மீனம்-தண்ணீர் கரையில்.

ருது பாவம் ருது லக்கினத்திற்கு ஏழில்:— ரவியும் ராகுமிருந்தால் விதவை, மதியிருந்தால் புத்திர நாசம், செவ்வாயிருந்தால் வேசை, புதனிருந்தால் மலடி, குருவிருந்தால் நல்லது, சுக்கிரனும் சனியுமிருந்தால் குலவினியாவாள், கேதுவிருந்தால் உறவுக்கு விரோதி, ஏழாமிடம் சுத்தமாயின் எல்லோருக்கும் நல்லவளாயிருப்பாள்.

சகுனம்:-வலியன், கருடன், காட்டுக்காடை, கழுகு, ஆந்தை, உடும்பு, கீரி, குரங்கு வலமிருந்து இடமாகப் போக வேண்டும். நாரை, விச்சுளி, காக்கை, செம்போத்து, கிளி, கொக்கு, மயில், கோழி, ஓணான், புள்ளிமான், புனுகுப் பூனை, புலி, நரி இடமிருந்து வலமாகப் போக வேண்டும். பாம்பு, பூனை, முயல் குறுக்கிடலாகாது.

சுப சகுனங்கள்.— குடை, கொடி, சாமரை, கரும்பு, அக்ஷதை, மாமிசம், தயிர், கள், தேன், பொரி, ரிஷபம், யானை, குதிரை, நரி, பசுக்கள், பட்சிக் கூட்டம், சலவை வஸ்திரம், மங்கள வாத்தியம், புஷ்பம், மணக்கோலம், சுபவரிசை, தாசி, சுமங்கலி, கன்னிகை, நிறை குடம், பழங்கள், செந்தணல், இரட்டைப் பிராமணர், சாதம், அரசர், முத்து, (சிலர் பால் சுப்சகுனம் மென்பர்), முஞ்சூறின் சத்தம், வேத ஓசை, கழுதை, குதிரைக் கனைத்தல், நாய் உதறல், ஆந்தை கின் கூட்டல் சுபம்.

அப சகுனம்:—தூரஸ்திரீ, அமங்கலி, அலி, எண்ணைக்குடம், பால், பயங்கரமான வேஷதாரி, அரிவாள், கோடாரி, கடப்பாரை, புதுப்பானை, விறகுக் கட்டு, விரிதலை, ஒற்றைப் பிராமணன், மூன்றுகோமுட்டிகள், அழுத குரல், ஒற்றைக்குரல், அழுதல், பன்றி உறுமல், பூனை கத்துதல், பூனையையும் கழுதையையும் காணல், அபானவாயு பறிதல், கொக்கரித்தல் ஓங்காரம் போடல் கால் இடறல் தலைத் தட்டல் உண்டு போவெனல், போகாதே எனல், அகால மழை, தூறல் இவை ஆகாவாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

27 - நட்சத்திரங்கள் செய்யும் சுப காரியங்கள்

1. அசுவனி:—சுதகமனை புகுதல், வித்யாரம்பம், உபநயனம், முடி சூட்டல், தானியம் வாங்க, வாகனம் மேற ஆபரணம் பூண கோடி யுடுக்க, சமுத்திர யாத்திரை மங்கலியம் செய்தல், பும்சவனம், விவாகம், நிஷேகம், விதை விதைக்க தானியஞ் செலவிட வியாதியஸ்தியர் மருந்துண்ண, மாடு வாங்க.

2. பரணி—கதிரறுக்க, மாடு வாங்க, ஆயுதப் பிரயோகம், மூலிகை உபயோகிக்க, அடுப்பு வைக்க, தானியம் களஞ்சியத்தில் வைத்தல் வியாதியஸ்தர் குளிக்க.

3. கிருத்திகை — ஆயுதப் பிரயோகம், கடன் நீக்க, சுரங்கம் வெட்ட.

4. ரோகிணி:—நிஷேகம், சீமந்தம், நாமகரணம், வித்யாரம்பம், உபநயனம், முடி சூட்ட, விவாகம், கிருஷியாரம்பம், விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் வாங்க, வாகன மேற ஆயுதம் பயிற்ற, ஆபரணம்பூண, கோடி யுடுக்க, வாஸ்துவிட, கிரகப் பிரவேசம், குளம் கிணறு வெட்ட, ஆயுதப்பிரயோகம் செய்ய, மங்கலியம் செய்ய பும்சவனம், தொட்டிலில் குழந்தையை விடுதல், தானியம் களஞ்சியத்தில் வைக்க, மாடு வாங்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ணல், யாத்திரை.

5. மிருகசீரிஷம்:—சீமந்தம், சுதகமனை புகுதல், நாமகரணம், காது குத்தல், உபநயனம், முடி சூட்டல், விவாகம் தான்யம் வாங்க, வாகன மேற ஆயுதம் பயிற்ற, ஆபரணம் பூண, வாஸ்துவிட, கிரக பிரவேஷம், குளம் கிணறுவெட்ட, சமுத்திர யாத்திரை, நிஷேகம், பும்சவனம், விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் களஞ்சியத்தில் வைக்க, தானியம் செலவிட, மாடு வாங்க, வியாதியஸ்தர் மருந்துண்ணல், வியாதியஸ்தர் குளிக்க.

6. திருவாதிரை:—காது குத்த, வித்யாரம்பம், ஆயுதப் பிரயோகம் செய்ய, தொட்டிலில் குழந்தையை விடுதல், தானியம் களஞ்சியத்தில் வைத்தல், வியாதியஸ்தர் குளிக்க.

7. புனர்பூசம்:—சீமந்தம், சுதகமனை புகுதல், காதுகுத்த, வித்யாரம்பம், உபநயனம், முடிசூட்ட, கிருஷியாரம்பம், தானியம் வாங்க, வாகனமேற, ஆயுதம் பயிற்ற, கோடி யுடுக்க, வாஸ்துவிட, கிரகப்பிரவேஷம் செய்ய, மங்கலியஞ் செய்ய, விவாகம் செய்ய, நிஷேகம், பும்சவனம், எருவிட, மாடு வாங்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண, யாத்திரை.

8. பூசம்:—பும்சவனம், சீமந்தம், காது குத்த, வித்யாரம்பம், உபநயனம், முடிசூட்ட, கிருஷியாரம்பம், விதை விதைக்க, தானியம் வாங்க, ஆபரணம் பூண, கோடியுடுக்க, வாஸ்துவிட, கிரகப் பிரவேசம், ஆயுதப் பிரயோகம், மங்கலியம் செய்ய, விவாகம், நிஷேகம், தொட்டிலில் குழந்தையை விட, எருவிட, கதிரறுக்க, தானியஞ் செலவிட, மாடு வாங்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண, குளிக்க, யாத்திரை.

9. ஆயில்யம்:—ஆயுதப் பிரயோகம், நவக்கிரக சாந்தி செய்ய.

10. மகம்:—விவாகம், விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் வாங்க, வாகனமேற, ஆயுதம் பயிற்ற, வாஸ்துவிட, குளம் கிணறு வெட்ட, ஆயுதப்பிரயோகம் செய்ய, மங்கலியஞ் செய்ய, தானியம் களஞ்சியத்தில் வைக்க, தானியஞ் செலவிட, மாடு வாங்க.

11. பூரம்:—ஆயுதப் பிரயோகம் செய்ய, சித்திரம் எழுத, மாடு வாங்க, வியாதியஸ்தர் குளிக்க.

12. உத்திரம்:—நிஷேகம், சீமந்தம், சுதகமனை புக, நாமகரணம், காதுகுத்த, வித்யாரம்பம், உபநயனம், முடிசூட்ட, விவாகம், கிருஷியாரம்பம், விதை விதைக்க, தானியம், மாடு வாங்க, வாகன மேற, ஆயுதம் பயிற்ற, கோடியுடுக்க, வாஸ்துவிட, கிரகப்பிரவேசம், குளம், கிணறு வெட்ட, மங்கிலியஞ் செய்ய, பும்சவனம், தொட்டிலில் குழந்தையை விட, எருவிட, கதிரறுக்க, தானியஞ் செலவிட, களஞ்சியத்தில் வைக்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண.

13. அஸ்தம்:—சுதகமனை புகுதல், நாமகரணம், காது குத்தல், வித்யாரம்பம், உபநயனம், முடி சூட்டல், கிருஷியாரம்பம், விதை விதைக்க, கதிரறுக்க, தானியம், மாடு வாங்க, வாகனமேற, ஆயுதம் பயிற்ற, ஆபரணம் பூண, கோடியுடுக்க, கிரகப்பிரவேசம், குளம், கிணறு வெட்ட, சமுத்திர யாத்திரை, மாங்கலியஞ் செய்தல், விவாகம், நிஷேகம், பும்சவனம், சீமந்தம், தானியஞ் செலவிட, களஞ்சியத்தில் வைக்க, வியாதியஸ்தர் மருந்துண்ண, குளிக்க.

14. சித்திரை:—சுதகமனை புகுதல், காது குத்தல், வித்தியாரம்பம், உபநயனம், முடி சூட்டல், தானியம், மாடு வாங்க, வாகன மேற, ஆயுதம் பயிற்ற, ஆபரணம் பூண, கோடியுடுக்க, கிரகப் பிரவேசம், குளம் கிணறு வெட்ட, ஆயுதப்பிரயோகம், நிஷேகம், பும்சவனம், எருவிட, தானியஞ்செலவிட, வியாதியஸ்தர் மருந்துண்ண, குளிக்க.

15. சுவாதி:—நிஷேகம், சுதகமனைபுகுதல், வித்தியாரம்பம், உபநயனம், முடிசூட்டல், விதை விதைக்க, தானியம், மாடு வாங்க, வாகன மேற, ஆயுதம் பயிற்ற, கோடியுடுக்க, வாஸ்து விட, கிரகப் பிரவேசம், சமுத்திர யாத்திரை, ஆயுதப்பிரயோகம், மாங்கலியஞ் செய்ய, விவாகம் பும்சவனம், தானியஞ் செலவிட, கிரகாரம்பம், மருந்துண்ண.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

16. **விசாகம்**:—விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் வாங்க, கோடியுடுக்க, தானியஞ்செலவிட, மாடு வாங்க, வியாதியஸ்தர் குளிக்க.

17. **அனுஷம்**—நிஷேகம், சூதகமனை புகுதல், நாமகரணம், வித்தியாரம்பம், உபநயனம், முடி சூட்டல், **விவாகம்**, விதை விதைக்க, தானியம் வாங்க, வாகனமேற, ஆயுதம் பயிற்ற, ஆபரணம் பூண, கோடியுடுக்க, வாஸ்துவிட, சமுத்திர யாத்திரை, மங்கலியஞ் செய்ய, பும்சவனம், எருவிட, கதிரறுக்க, தானியஞ் செலவிட, களஞ்சியத்தில் வைக்க, மாடு வாங்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் குளிக்க.

18. **கேட்டை**:—மாடு வாங்க, குளம் கிணறு வெட்ட, ஆயுதப் பிரயோகம், வியாதியஸ்தர் குளிக்க.

19. **மூலம்**:—நிஷேகம், நாமகரணம், **விவாகம்**, கிருஷியாரம்பம, விதை விதைக்க, தானியம் வாங்க, கிரகப்பிரவேசம், பும்சவனம், தானியஞ் செலவிட, மாடு வாங்க, வியாதியஸ்தர் குளிக்க, யாத்திரை.

20. **பூராடம்**:—ஆயுதப் பிரயோகம், கணிதாரம்பம், கடன் தீர்க்க, மாடு வாங்க, வியாதியஸ்தர் குளிக்க.

21. **உத்திராடம்**:—நிஷேகம், சீமந்தம், சூதகமனை புகுதல், நாமகரணம், காது குத்தல், உபநயனம், முடிசூட்டல், **விவாகம்**, கிருஷியாரம்பம், விதை விதைக்க, வாகனமேற, ஆயுதம் பயிற்ற, கோடியுடுக்க, வாஸ்துவிட, கிரகப்பிரவேசம் செய்ய, குளம் கிணறு வெட்ட, பும்சவனம், குழந்தையை தொட்டிலில் விட, எருவிட, கதிரறுக்க, தானியஞ் செலவிட, களஞ்சியத்தில் வைக்க, கிரக ஆரம்பம்.

22. **திருவோணம்**:—நிஷேகம், பும்சவனம், சீமந்தம், சூதகமனை புகுதல், நாமகரணம், காது குத்தல், வித்யாரம்பம், முடிசூட்ட, **விவாகம**, விதை விதைக்க, கதிரறுக்க, தானியம் வாங்க, வாகனமேற, ஆயுதம் பயிற்ற. வாஸ்து விட, குளம் கிணறு வெட்ட, சமுத்திர யாத்திரை ஆயுதப்பிரயோகம், மங்கலியஞ் செய்தல்.

23. **அவிட்டம்**:-நாமகரணம், வித்தியாரம்பம், வாகனமேற, முடிசூட்ட, தானியம் வாங்க, கோடி யுடுக்க, சமுத்திர யாத்திரை, **விவாகம்**, மங்கலியஞ் செய்ய, நிஷேகம், பும்சவனம், காது குத்த, விதை விதைக்க, தானியஞ் செலவிட, வியாதியஸ்தர் மருந்துண்ண, குளிக்க.

24. **சதயம்**:—நாமகரணம், வித்தியாரம்பம், விதை விதைக்க, தானியம், மாடு வாங்க, வாஸ்துவிட, கிரகப்பிரவேசம், மங்கலியஞ் செய்ய, **விவாகம்**, பும்சவனம், தொட்டில் குழந்தையை விட, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண, குளிக்க, யாத்திரை.

25. **பூரட்டாதி**:—ஏற்றம் ஸ்தாபிக்க, மந்திரம் ஜெபிக்க, மாடு வாங்க, வியாதியஸ்தர் குளிக்க.

26. **உத்திரட்டாதி**:—நிஷேகம், சீமந்தம், சூதகமனை புகுதல், நாமகரணம், காதுகுத்தல், வித்தியாரம்பம், உபநயனம், **விவாகம்**, கிருஷியாரம்பம், விதை விதைக்க, தானியம் வாங்க, வாகனம் மேற, ஆயுதம் பயிற்ற, கோடியுடுக்க வாஸ்துவிட, கிரகப் பிரவேசம், குளம் கிணறு வெட்ட, பும்சவனம், குழந்தையை தொட்டிலில் விட, எருவிட, கதிரறுக்க, தானியம் களஞ்சியத்தில் வைக்க, செலவிட, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண, யாத்திரை.

27. **ரேவதி**:—நிஷேகம், சீமந்தம், நாமகரணம், காது குத்த, வித்தியாரம்பம், உபநயனம், முடி சூட்ட, **விவாகம்**, விதை விதைக்க, தானியம் வாங்க, வாகன மேற, ஆயுதம் பயிற்ற, ஆபரணம் பூண, கோடியுடுக்க, வாஸ்துவிட, கிரக பிரவேசம், குளம் கிணறு, வெட்ட, சமுத்திர யாத்திரை, அசுவ சாந்தி, மங்கலியஞ் செய்ய, பும்சவனம், கிருஷியாரம்பம், கதிரறுக்க, தானியஞ் செலவிட, மாடு வாங்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண.

திதிகளின் விஷ சூன்ய ராசிகள்

பிரதமை	துலாம், மகரம்	சஷ்டி	மேஷம், சிம்மம்	ஏகாதசி	தனுசு, மீனம்
துதியை	தனுசு, மீனம்	சப்தமி	தனுசு, கடகம்	த்வாதசி	துலாம், மகரம்
திருதியை	மகரம், சிம்மம்	அஷ்டமி	மிதுனம், கன்னி	திரயோதசி	ரிஷபம், சிம்மம்,
சதுர்த்தி	கும்பம் ரிஷபம்	நவமி }	சிம்மம்,	சதுர்த்தசி	மிதுனம், கன்னி
பஞ்சமி	மிதுனம், கன்னி	தசமி }	விருச்சிகம்		தனுசு, மீனம்

அமாவாசை, பௌர்ணமிகளுக்கு விஷ சூன்ய ராசிகள் இல்லை.

வாஸ்து புருஷன் நித்திரை விடுதல்

சித்திரைமீ 10௨ 5-நாழிகை, வைகாசிமீ 21௨ 8-நாழிகை, ஆடிமீ 11௨ 2-நாழிகை, ஆவணிமீ 6௨ 21-நாழிகை, ஐப்பசிமீ 11௨ 2-நாழிகை, கார்த்திகைமீ 8௨ 10-நாழிகை, தைமீ 12௨ 8-நாழிகை, மாசிமீ 22-௨ 8-நாழிகை.

மேற்சொன்ன தினங்களில் குறிப்பிட்ட நாழிகைக்கு மேல் 3½-நாழிகைக்குள் **வாஸ்து புருஷன்** எழுந்து தந்ததாவனம், ஸ்நானம், பூஜை, போஜனம், தாம்பூலம் ஆகிய 5-காரியங்களை யும் ½-நாழிகைக்குள் செய்து சயனிப்பார். இதற்குள் போஜனம் தாம்பூல தாரணம் செய்யும் சமயம் 1½-நாழிகை, அக்காலங்களில் கிருகாரம்பஞ் செய்ய உத்தமம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கௌரி பஞ்சாங்கம்

பகல் 1-க்குக் காலம் 8, இரவு 1-க்குக் காலம் 8, காலம் 1-க்கு நாழிகை 3¾. இவ்விதம் அந்நந்த. வாரங்களில் உதய முதலாக ஒவ்வொரு காலத்திற்கும் பலனறிக.

கீழ்க்கண்ட கடிகார மணியில் சூரிய உதயம் சேர்த்தும் அல்லது கழித்தும் மணி அறியவும்.

மணி முதல் மணி வரையில்		6-7½	7½-9	9-10½	10½-12	12-1½	1½-3	3-4½	4½-6
ஞாயிறு	பகல்	உத்தி	அமுத	ரோக	லாபம்	தனம்	சுகம்	சோர	விஷம்
	இரவு	தனம்	சுகம்	சோர	விஷம்	உத்தி	அமுத	ரோக	லாபம்
திங்கள்	பகல்	அமுத	விஷம்	ரோக	லாபம்	தனம்	சுகம்	சோர	உத்தி
	இரவு	சுகம்	சோர	உத்தி	அமுத	விஷம்	ரோக	லாபம்	தனம்
செவ்வாய்	பகல்	ரோக	லாபம்	தனம்	சுகம்	சோர	உத்தி	விஷம்	அமுத
	இரவு	சோர	உத்தி	விஷம்	அமுத	ரோக	லாபம்	தனம்	சுகம்
புதன்	பகல்	லாபம்	தனம்	சுகம்	சோர	விஷம்	உத்தி	அமுத	ரோக
	இரவு	உத்தி	அமுத	ரோக	லாபம்	தனம்	சுகம்	சோர	விஷம்
வியாழன்	பகல்	தனம்	சுகம்	சோர	உத்தி	அமுத	விஷம்	ரோக	லாபம்
	இரவு	அமுத	விஷம்	ரோக	லாபம்	தனம்	சுகம்	சோர	உத்தி
வெள்ளி	பகல்	சுகம்	சோர	உத்தி	விஷம்	அமுத	ரோக	லாபம்	தனம்
	இரவு	ரோக	லாபம்	தனம்	சுகம்	சோர	உத்தி	விஷம்	அமுத
சனி	பகல்	சோர	உத்தி	விஷம்	அமுத	ரோக	லாபம்	தனம்	சுகம்
	இரவு	லாபம்	தனம்	சுகம்	சோர	உத்தி	விஷம்	அமுத	சோர

சுப ஹோரைகள் (மு—முதல் ; வ—வரை)

